# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ARASU OOZHIYAR Tamil Nadu Government Employees Association's Monthly

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

| April 2025 | Volume 46 | Issue 04 | 36 Pages | Price Rs.20.00 |
| --- | --- | --- | --- | --- |
| ஏப்ரல் 2025 | மலர் 46 | இதழ் 04 | 36 பக்கம் | விலை ரூ.20.00 |









## 23.3.2025 அன்று ஜாக்டோ - ஜியோ
# மாவட்ட தலைநகர் உண்ணாவிரதம்




































அரசு ஊழியர்

மாத இதழ்

ARASU OOZHIYAR

Tamil Nadu Government Employees Association's Monthly

2025 ஏப்ரல்

மலர்:46 இதழ்:4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: மு.பாஸ்கரன்

ஆசிரியர் குழு:

மு.பாஸ்கரன், மு.சீனிவாசன், சா.டானியல் ஜெயசிங், தெ.வாசுகி, வெ.சோமசுந்தரம், வே.விஜயகுமரன், செ.பிரகாஷ், ச.தினேஷ், இ.மைக்கேல் லில்லிபுஷ்பம்

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி

9677003178

முகவரி:

பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,

19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,

எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,

சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200

தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளடக்கம்...


1. நமது கோரிக்கைகளும் முதல்வருக்கு வழங்கப்படும் தவறான ஆலோசனைகளும்... தலையங்கம்....4
2. அரசின் பட்ஜெட்டும், கோரிக்கைகளின் காலதாமதமும் அரசு தருவதாக இல்லை, நாம் விடுவதாக இல்லை இறுதி வெற்றி நமதே! பொதுச் செயலாளர் மேசையிலிருந்து....5
3. என்று தணியும் எங்கள் ஓய்வூதிய தாகம், என்று புரியும் எங்கள் கோரிக்கைகளின் நியாயம்!....9
4. சங்கத் தலைவரும் இலக்கியத் தலைவருமான கந்தர்வன் ....13
5. National Convention of Workers....14
6. 23.03.2025 அன்று ஜாக்டோ - ஜியோ மாவட்ட தலைநகர் உண்ணாவிரதம்....18
7. இந்திய தொழிற்சாலைகள் - நாஜிகளின் சித்திரவதை முகாம்களா? நுகர்வு அதிகரிப்பின் அரசியல்....22
8. முறையீடு ....26
9. மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் - கருத்தரங்கம் மற்றும் மனித சங்கிலி....27
10. மேனாள் மாநில செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா ....32
11. கோரிக்கை மனுவை கசக்கி வீசி உதாசீனம் செய்து, மாநிலத்தலைவரை கைது செய்ய உத்தரவிட்ட பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. ....33

# நமது கோரிக்கைகளும் முதல்வருக்கு வழங்கப்படும் தவறான ஆலோசனைகளும்...

2018ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்கட்சி தலைவராக திகழ்ந்த போதும் 2021ல் தமிழ்நாடு முதலமைச்சர் ஆன பின்பும் கடந்த சுமார் ஏழு ஆண்டுகளாக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் 10 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக மாநாட்டில் கலந்து கொண்டபோதும் பலகட்ட பேச்சுவார்த்தையின் போதும் நிறைவேற்றி தருவதாக பல விதமான ஆசை வார்த்தைகளால் எங்களுக்கு நம்பிக்கையை மட்டும் ஏற்படுத்தி வந்தீர்கள். ஆனால் கடந்த மாதம் 14ந் தேதி ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் நடத்திய பேச்சுவார்த்தையும் அவ்வாறே நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் மேலும் அதிகமானது. ஆனால் 10 அம்ச கோரிக்கைகளின் மீது ஆட்சி காலத்தின் இறுதி பட்ஜெட்டில் ஒரு அறிவிப்பும் இல்லாதது தமிழக அரசின் நம்பிக்கை துரோகம் அரசு ஊழியர் மற்றும ஆசியர்களுக்கு மிகப்பெரிய இடியாக அமைந்தது.

எங்களுக்கு ஒரு விசயம் நன்கு புரிகின்றது எதிர்கட்சியாக இருக்கும்போது எங்களுடன் கைகோர்த்து போராட்ட கோஷம் எழுப்பி போராட்டத்தை உற்சாகப்படுத்திவிட்டு ஆட்சிக்கு வந்தபின் எங்களை கண்டு கொள்ளாமல் எங்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் அதிகாரிகள் சொல்லும் தவறான ஆலோசனைகளை கேட்டு எங்களுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதும் அடுத்த தேர்தலில் எங்களுடைய வாக்குகள் இல்லாவிட்டாலும் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நம்புவதும் காலங்காலமாக நாங்கள் சந்தித்து வந்த நிகழ்வுதான்.

2003 ஆம் ஆண்டு செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழக மக்கள் தொகையில் வெறும் 5 சதவீதம் மட்டுமே உள்ள அரசு ஊழியர் ஆசிரியர்களின் வாக்குகள் எனக்கு தேவையில்லை என சட்டசபையில் பகிரங்கமாக அறிவித்த பின்பு நடைபெற்ற 2006 சட்டமன்ற தேர்தலில் மண்ணைக்கவ்விய வரலாற்றை மறந்திருக்க வாய்ப்பில்லை.

முதல்வருடன் இருந்துக் கொண்டே தவறாக வழிநடத்தும் சுய நல கும்பலின் புத்திக் கூர்மைக்கு அரசு ஊழியர் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றாமல் இரையாகி வருவது புரிந்து கொள்ள முடிகின்றது.

எந்த அரசு ஊழியரும் ஆசிரியரும் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை மக்கள் நலனை மறந்து அதிகாரிகள் சொற்களை கேட்டு ஆட்சிநடத்திய ஆட்சியாளர்கள் கடைசியில் தங்கள் அரியணையை இழந்தார்கள் என்பது தான் கடந்த கால வரலாறு.

எனவே தேர்தல்கால வாக்குறுதியை துணிச்சலாக முதல்வர் நிறை வேற்ற மறுப்பதால், தொடர்ச்சியான போராட்டங்களை திட்டமிட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

- ஆசிரியர் ●

# அரசின் பட்ஜெட்டும், கோரிக்கைகளின் காலதாமதமும் அரசு தருவதாக இல்லை, நாம் விடுவதாக இல்லை இறுதி வெற்றி நமதே!

கடந்த ஆட்சிக்காலத்தில் நமது கோரிக்கைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் போதெல்லாம் நம்மோடு போராட்டக்களத்தில் கலந்துகொண்டு நமக்காக குரல் கொடுத்தவரும் கழக ஆட்சி அமைந்தவுடன் கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என சொன்னது மட்டுமல்லாமல், தேர்தல் வாக்குறுதி பட்டியலில் வரிசை எண் 309 முதல் 318 வரை சேர்த்து தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரத்தின் போது மேடைகளில் வாக்குறுதியளித்து முழங்கினார். அரசு ஊழியர்களும் நமக்கான ஆட்சி அமையவேண்டுமென தேர்தல் களத்தில் முழு ஆதரவளித்தனர். 2021ல் ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த நான்கு ஆண்டுகாளாக நாம் கோரிக்கைகளை நினைவு படுத்தும் போதெல்லாம் கொரானா, பெஞ்சால் புயல், கடந்த ஆட்சியை காரணம் காட்டியும், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய நிதியை தர மறுக்கிறது உள்ளிட்ட காரணங்களால் நிதி நிலமை சரியில்லை எனவும், நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் வாக்குறுதியளித்தார்.

எனவே, இந்த ஆட்சியின் கடைசி பட்ஜெட் கடந்த 14.03.2025 அன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது கண்டிப்பாக பழைய பென்சன் திட்டம், சரண்டர் உள்ளிட்ட கோரிக்கைகள் சம்பந்தமாக அறிவிப்பு வெளிவரும் என ஊழியர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் 01.04.2026 முதல் சரண்டர் வழங்கப்படும் என அறிவித்தது ஊழியர்களிடையே மிகுந்த ஏமாற்றத்தையும், இந்தஆட்சியின் மீது கோபமும் ஏற்பட்டது. அதன் வெளிப்பாடு 23.03.2025 அன்று ஜாக்டோ-ஜியோ சார்பாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடைபெற்ற உண்ணாவிரதப்போராட்டத்தில் அதிகப்படியான ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்பு எடுத்துக்காட்டியது. தமிழ்நாடு அரசு பட்ஜெட் கூட்டத்தொடருக்கு முன்பு பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பித்ததன் நோக்கம் நமக்கு எதுவும் அறிவிக்கப்போவதில்லை என்பதை தெள்ளத்தெளிவாக உணர்த்தியுள்ளது. 14.03.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் மாநிலத்தின் பொருளாதார நிலை எவ்வாறு உள்ளது என்பதை நாமும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசு சமர்ப்பித்துள்ள பொருளாதார ஆய்வறிக்கையும் தமிழகம் பொருளாதார நிலையில் சிறப்பாக உள்ளதாகவே தெளிவு படுத்தியுள்ளது. இந்தியாவில் 2வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 8.9 ஆக உயர்ந்துள்ளது. இந்திய அளவில் தமிழ்நாட்டின் தனிநபர் வருவாய் 171.2 ஆக உயர்ந்துள்ளது. உலக பொருளாதாரம் 3.33 சதவீதமாக உள்ளது. இந்தியாவின் பொருளாதரா நிலை 6.48 சதவிதமாக உள்ளது. ஆனால், தமிழ்நாட்டின் பொருளாதார நிலை 8% உள்ளதாக ஆய்வறிக்கை கூறுகிறது. தனிநபர் ஆண்டு வருமானம் 2.78 லட்சம். ஆனால், தேசிய தனிநபர் ஆண்டு வருமானம் 1.69 லட்சம் மட்டுமே. தேசிய தனிநபர் வருமானத்தைவிட தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 1.6 மடங்கு அதிகமாக உள்ளது. தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு தேசிய அளவில் நான்காவது மாநிலமாக உள்ளது. மஹாராஷ்டிரா, கர்நாடகா, மேற்குவங்காளம், மாநிலங்களில் ஒவ்வொரு பொருளாதார பெருநகரம் மட்டுமே உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் பொருளாதார பெருநகரங்களாக சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்கள் பொருளாதார மேம்பாட்டில் தனது பங்களிப்பை செலுத்துகின்றது. வேளாண்மைத்துறையிலும் 1.5 லட்சம் கோடி அளவிற்கு தனது பங்களிப்பை செலுத்துகிறது. குறிப்பாக நெல், ராகி, கம்பு, சோளம், மற்றும் எண்ணைவித்துக்கள், கரும்பு, பருத்தி போன்ற பணப்பயிர்களிலும் கடந்த 2019-20ல் 32.1%மாக இருந்த நிலையில் தற்போது 34.4%மாக உயர்ந்துள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் 16.3 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படுகிறது. கிராமப்புறங்களில் பணவீக்கம் 2019-20 ல் 6%வீதாக இருந்தது, 2020-25ல் 4.5%மாக குறைந்துள்ளது. தொழில்துறையில் சிறு,குறு, நடுத்தர நிறுவனங்களில் (MSME) தேசத்தில் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1,500 தொழிற்சாலைகள் வாகன உற்பத்தியில் ஈடுபட்டுவருகிறது. இந்தியாவின் டெட்ராய்டு

மாநிலமாக தமிழ்நாடு உருவாகியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த தொழிலாளர்களில் 33.31 தமிழ்நாடு பூர்த்திசெய்கிறது. இதில் தொழிற்சாலைகளில் 15.9%மும் கட்டுமானத்தில் 17.2%மும் பணியாற்றுகிறார்கள். தமிழ்நாடு 2030ல் ஒரு டிரில்லியன் டாலர் என்ற இலக்கை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளுக்கான வெளிநாட்டு முதலீடு 2019-20 களில் 2.5 லட்சம் கோடி என்பது 2023-24 ஆண்டில் 3.01 கோடியாக அதிகரித்துள்ளது. மாநிலம் தொழில் வளர்ச்சியில் முன்னேறியுள்ளது மிகுந்த வரவேற்கத்தக்கது. ஆனால், இதுபோன்ற தொழில்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான பணிநிலமையும், வாழ்க்கைத்தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியமும், அவற்றை பெறுவதற்கான சங்கம் அமைக்கும் உரிமையும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். தொழிலாளர் நலன் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் 15-59 வயது வரை உள்ளவர்கள் தேச அளவில் 56.9%மாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் 64.3%மாக வேலைத்திறனை அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக தேச அளவில் Social Progress Index (SPI), Gross Enrolment Ratio (GER), Sustainable Development Goals(SDG) ஆகியவற்றில் தமிழ்நாடு முதல் மூன்று இடங்களில் உள்ளது. என்பது குறிப்படத்தக்கது. 2005-06ல் 36.54%மாக வருமைக்கோட்டிற்கு கிழ் உள்ளவர்ககளின் சதவீதம் 2024-25ல் மிக சொற்பமாக 1.43%மாக குறைந்துள்ளது.

கல்வித்துறையில் மிகச்சிறந்த மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் 58,722 பள்ளிகளில் 1.29கோடி குழந்தைகள் சத்துணவு திட்டத்தின் காரணமாக பயனடைந்துவருகிறார்கள். ஆனால், ஆரம்பப்பள்ளிகளில் மாணவர்களின் வருகையை உத்தரவாதப்படுத்தவும், இளம் குழந்தைகளின் பசியைப்போக்கிக்கொண்டிருக்கும் சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் காலமுறை ஊதியம் இன்னமும் கேள்விக்குறியாகவுள்ளது. அதே ஊழியர்களின் ஓய்வூதியம் மிகச்சொற்பமாக ரூ.2,000 என்பதை உயர்த்த மாநில அரசிற்கு மனமில்லை. ஆரம்பப்பள்ளிகளில் மாணவர்களின் வருகை 98.4%மும், 97.5% உயர்நிலைக்கல்வியிலும், மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர்களின் வருகை 82.9%மும் மாணவர்களின் வருகை உள்ளது. இது தேச அளவில மாணவர்களின் வருகையை ஒப்பீடு செய்யும் போது தமிழ்நாடு முதல் மாநிலமாக உள்ளது. ஆனால், பள்ளிகளில் கடந்த 7 வருடங்களாக இலட்சக்கணக்கான காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல். காலிப்பணியிடங்களையும் ஏனைய ஆசிரியர்கள் கடும் பணிச்சுமைகளுக்கிடையில் கடும்பணியாற்றி மாநிலத்தை முதன்மை மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள், ஆனால், அவர்களின் வாழ்வாதார கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில் அரசுக்கு அக்கரையில்லை.

National Family Health Survey-5ன்படி 3வது இடத்தில் தமிழ்நாடு உயிர்காக்கும் மாநிலமாக திகழ்கிறது. 8,713 துணை சுகாதார மையம், 2,336 ஆரம்ப சுகாதார நிலையம், 372 அரசு மருத்துவ மனைகளும், 36 மருத்துவக்கல்லூரி மருத்துவமணைகளும் மேற்கண்ட ஆய்வின்படி சிறப்பாக செயல்பட்டுவருகிறது. ஆனால், இவைகளில் பணியாற்றும் மருத்துவர் உள்பட அடிப்படை சுகாதாரப்பணியாளர்கள் வரை அதிகப்படியாக வெளி முகமை, காண்ட்ராக்ட், தொகுப்பூதியத்தில் பணியாற்றிவருகிறார்கள் என்பதை தவிர்த்து முழுமையாக அரசுப்பணி மூலமாக பணிநியமனங்கள் உருவாக்கப்பட்டால் அரசு பொது மருத்துவமனைகளுக்கு பொது மக்களின் வருகை அதிகரிக்கும். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் PPP & COE ஊழியர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணியாற்றிவருகிறார்கள். ஊர்புற நூலகர்கள், MRBசெவிலியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், பலநோக்கு மருத்துவ பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பத்தாண்டுகளுக்கு மேலாக தொகுப்பூதியத்தில் பணியாற்றிவருகிறார்கள்.

ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டின் பொருளாதாரம் 2025-26ல் 35 லட்சம்கோடியாக உள்ளது. பொருளாதார வளர்ச்சி என்பது 14.50%மாக உள்ளது. பற்றாக்குறை 3.00%மாக குறைந்துள்ளது. மாநிலத்தின் GSDP 26.07%மாக உள்ளது. நிதிப்பற்றாக்குறை 41,635 கோடியாக குறைந்துள்ளது. மூலதனச் செலவினம் Capital Expenditure 57,231 கோடியாக அதிகரித்துள்ளது. மாநிலத்தின் வரி வருவாய் 220,895 கோடி. வரியற்ற வருவாய் 28,819கோடி, மத்திய அரசுக்கு அளித்துள்ள வரி வருவாய் 58,022 கோடி வரி வருவாயிலிருந்து மாநிலத்திற்கு பங்கிடு வரவு 23,834 கோடியாகும்.

மகளிர்நலன் மற்றும் குழந்தைகள் நலன், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, தொழில்வளச்சி போன்றவற்றில் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. செமி கண்டக்டர், செயற்கை இழை, ஜவுளி, உயிர் அறிவியல், கடல் போக்குவரத்து, போன்ற துறைகள் முன்னெடுப்பு உள்ளது. 3,000 புதிய பேருந்துகள், 750 பழைய பேருந்துகள் புதுப்பித்தல், 1,125 புதிய மின் பேருந்துகள், 700 டீசல்

பேருந்துகள் இயற்கை எரிவாயு பேருந்துகளாக மாற்றம். ரூ.3,750 கோடியில் நகர்புறச்சாலைகள், 2,200 கோடியில் முதல்வரின் கிராமச்சாலைகள், நான்குவழித்தட உயர்மட்டச்சாலை என பல்வேறு ஒதுக்கீடுகள் இருந்தாலும், மாநிலச்சாலைகள் தனியார்மயப்படுத்தும் செயலை அரசு முனைப்புடன் செய்துவருவது, ஒருபக்கம் மக்களின் வரிப்பணத்தில் செலவிடப்படும் சாலைகள் தனியாருக்கு தாரைவார்க்கப்படும், தேசிய நெடுஞ்சாலைகளில் டோல்கேட் மூலம் கொள்ளையடிக்கப்படும் சுங்கவரி, இனி மாநில நெடுஞ்சாலைகளிலும் விரிவாக்கப்பட்டு மாவட்டங்களுக்கிடையே மக்கள் பயணம் மேற்கொள்ளும்போது சுங்கவரி செலுத்தும் நிலை ஏற்படும். அரசின் கஜானாவிற்கு வரவேண்டிய இந்த சுங்க வரியானது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மடைமாற்றம் செய்யப்படுகிறது. இதில் பணியாற்றும் ஊழியர்களின் நிலைமை கேள்விக்குறியாகியுள்ளது. இதற்காகவே, தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையானது தற்போது நெடுஞ்சாலை ஆணையமாக மாற்றப்படுகிறது. ஏற்கனவே, இந்தியன் டெலிகாம் என்ற நிறுவனம், *BSNL* மற்றும் *VSNL* ஆக மாற்றப்பட்டபிறகு இத்துறை அழிவை நோக்கி சென்றுகொண்டிருப்பதை கண்முன்னே பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசின் 2025-26 வருவாய் ரூ.3,31,569 கோடி, செலவினம் ரூ.3,73,204 கோடி, பற்றாக்குறை ரூ.41,635 கோடி என வளுவான நிலையில் உள்ளது. ஆனால், அரசு ஊழியர்கள் கோரிக்கைகள் முன்வைக்கும் போது மட்டும் நிதிச்சுமை என காரணம் காட்டி காலம்தாழ்த்தப்பட்டு வருகிறது. இந்தியா முழுவதும் எல்லா மாநிலத்திலும் பட்ஜெட் பற்றாக்குறை என்பது தவிர்க்க இயலாதது. இதுவரை எந்த பட்ஜெட்டும் உபரி பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டது கிடையாது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பிரதான கோரிக்கைகள் பற்றி பட்ஜெட்டில் கூறப்படாதது ஊழியர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈட்டியவிடுப்பு சரண் செய்வது 01.04.2026 முதல் அமுல்படுத்தப்படும் என்ற

| S.No. | Classification | 2023-2024 Accounts | 2024-2025 Revised Estimate | 2025-2026 Budget Estimate |
|---|---|---|---|---|
| 1. | Total Revenue Receipts | 2,64,597 | 2,93,906 | 3,31,569 |
| 2. | Total Revenue Expenditure | 3,09,718 | 3,40,374 | 3,73,204 |
| 3. | Revenue Deficit | 45,121 | 46,467 | 41,635 |
| 4. | Capital Expenditure | 40,500 | 46,766 | 57,231 |
| 5. | Net Loans & Advances | 4,821 | 8,473* | 8,102 |
| 6. | Fiscal Deficit (as a % of GSDP) | 3.32 | 3.26* | 3.00 |
| 7. | Outstanding Debt (as a % of GSDP) | 26.63 | 26.43 | 26.07 |
| 8. | Gross State Domestic Product | 27,21,571 | 31,15,998 | 35,67,818 |

அறிவிப்பு நமது கோரிக்கையை ஏளனம்செய்வது போல இருப்பதாக ஊழியர்களிடம் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசுஊழியர்களின் பிரதான கோரிக்கையான பழைய ஓய்வூதியத்திட்டம் அமுலாக்கம் சம்பந்தமாக எந்த அறிவிப்பும் இ;ல்லாதது தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக அரசு ஊழியர்கள் உணர்கிறார்கள். அரசுத்துறையில் சுமார் 4,50,000 காலிப்பணியிடங்கள் உள்ளதால் துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் மிகுந்த பணிப்பளுவினால் உடல் நலக்குறைவும், மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர். குறிப்பாக வருவாய்துறை, வளர்ச்சித்துறை, வணிகவரித்துறை, பொதுப்பணித்துறை, சமூகநலத்துறை, பத்திரப்பதிவுத்துறை, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை, உள்ளிட்ட துறைகளில் அதிகப்படியான காலிப்பணியிடங்கள் உள்ளதால் மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதை அரசு உணர வேண்டும். குறிப்பாக வேலைவாய்ப்பை நிரப்பிடும் வேலைவாய்ப்பு மற்றம் பயிற்சித்துறையில் 50% க்கும் மேலான காலிப்பணியிடங்கள் உள்ளது வேதனை அளிக்கக்கூடியது.

அரசின் புள்ளிவிபரப்படி கடந்த 2024ஆம்

**Table 3: Committed Expenditure in 2025-26 (in Rs crore)**

| Committed Expenditure | 2023-24 Actuals | 2024-25 Budgeted | 2024-25 Revised | % change from BE 24-25 to RE 24-25 | 2025-26 Budgeted | % change from RE 24-25 to BE 25-26 |
|---|---|---|---|---|---|---|
| Salaries | 75,030 | 84,964 | 81,460 | -4% | 91,726 | 13% |
| Pension | 37,697 | 42,509 | 41,437 | -3% | 46,214 | 12% |
| Interest payment | 53,566 | 62,456 | 60,357 | -3% | 69,114 | 15% |
| **Total** | **1,66,293** | **1,89,929** | **1,83,254** | **-4%** | **2,07,054** | **13%** |

Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget Documents 2025-26; PRS.

ஆண்டு வரை 64,22,000 படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கின்றனர். எனவே, அரசு காலிப்பணியிடங்களை நிரப்பிடும் என இளைஞர்களும், பணிப்பளுவிலிருந்து விடுதலை கிடைக்கும் என அரசு ஊழியர்களும் காத்திருந்த நிலையில் இந்த நிதியாண்டில் 40,000 பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்படும் என அறிவித்துள்ளதும் அதில் காவல்துறை போக மற்ற அலுவலகப்பணியிடங்கள் எத்தனை பணியிடங்கள் நிரப்பப்படும் என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

சமூக நீதி அரசு என தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் இந்த அரசு காலிப்பணியிடங்களை நிரப்பிடும் போது பொருளாதாரத்தில் தனி ஒரு மனிதன் முன்னேறும் பொதுதான் அவனுக்கு ச%கநீதி கிடைக்கும் என்பதை மனதில்கொண்டு அவ்வாறு சமூகநீதி என்பது ஒரு மனிதனுக்கு கிடைக்க வாழ்க்கைத்தேவைக்கான ஒரு அடிப்படை ஊதியமும், சமூக நீதி கொண்ட ஓய்வூதியமும் பிரதானமானது என்பதை அறிந்து அதற்கேற்றவாறு அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். ஆனால், அதற்கான எந்தவித அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் இல்லை.

எனவே, மேற்கண்ட புள்ளிவிபரங்களை பார்க்கும் போது நிதிச்சுமை என்பது தவறான காரணம் என்பதும், அவ்வாறு பழைய ஓய்வூதியம் அமுல்படுத்தப்பட்டால் மாநிலம் நிதி நெருக்கடியில் சிக்கிவிடும் என்ற கூற்று உண்மையானால், தமிழ்நாட்டைவிட பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ள மேற்கு வங்காளம் தொடர்ந்து பழைய ஓய்வூதியம் வழங்கி வருகிறது. அந்த மாநிலம் நிதி நெருக்கடியில் சிக்கிவிட்டதா? அல்லது ஜார்க்கண்ட், சட்டீஸ்கர், ராஜஸ்தான், இமாச்சல்பிரதேசம் போன்ற மாநிலங்கள் கடந்த இரண்டாண்டுகளாக பழைய ஓய்வூதியம் வழங்கிவருவதால் நிதி நெருக்கடியில் சிக்கித்தவிக்கிறதா? இல்லையே. எனவே, பழைய ஓய்வூதியம் வழங்க காலதாமதப்படுத்தப்படுவதற்கு காரணம் நிதி நிலமை இல்லை. அதன் உண்மையான காரணம் பங்களிப்பு ஓய்வூதியம் என்பது ஒரு மூலதனக்குவிப்பு. நமது ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் அரசின்பங்கிடு ஆகிய இரண்டும் சேர்ந்து நிதி மூலதனமாக, மூலதன குவிப்பாக (சுமார்.ரூ.72,000 கோடி) கார்ப்பரேட் நிறவனங்களுக்கு தேவைப்படுகிறது. எனவேதான் இந்த திட்டத்திலிருந்து ஆட்சியாளர்கள் மாற கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து நெருக்கடி வழங்கப்படுகிறது. அரசு அதிகாரிகள் தடையாக உள்ளார்கள்.

கடந்த காலங்களிலும், இதே நிலை இருந்தது. காமராஜர் காலத்தில் அதிக பள்ளிக்கூடங்களைத் திறக்க முடிவெடுத்தபோது, நிதியில்லை என அதிகாரிகளால் காரணம் கூறப்பட்டது. அதையும் மீறி மக்களிடம் சென்று பிச்சையெடுத்தாவது திட்டத்தை அமுல்படுத்துவேன் என அன்றைய மாண்புமிகு முதல்வர் கர்மவீரர் காமராஜ் அவர்களால் முடிவெடுக்கப்பட்டது. புரட்சித்தலைவரால் சத்துணவுத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட போது இதே நிலை ஏற்பட்டது. அதை மீறித்தான் அத்திட்டம் இந்தியாவிற்கு முன்னோடியாக அமுல்படுத்தப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்கள்1988ல் மத்தியஅரசுக்குஇணையான ஊதியத்தை அமுல்படுத்த முடிந்தது. புரட்சித்தலைவி ஜெயலலிதாஅம்மையார் அவர்கள் 2004 தேர்தலுக்குப்பிறகு 50% பஞ்சப்படியை அடிப்படை ஊதியத்தோடு இணைத்தார். இதுபோன்ற பல்வேறு உதாரணங்களைக்கூறிவிட முடியும். ஆனால் தற்போது அரசு தொடர்ந்து பழைய ஓய்வூதியம், சரண்டர், காலிப்பணியிடங்களை நிரப்புதல், காலமுறை ஊதியம், நிரந்தரபணி நியமனம் உள்ளிட்ட கோரிக்கைகளை மக்கள் நலன்சார்ந்து, ஊழியர் நலன் சார்ந்து அமுல்படுத்திட வேண்டும் என அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியரிகள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

தோழர்களே, கோரிக்கைகளின் நியாயத்தை நாம் போராட்டங்களின் பங்கேற்பின் மூலமாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவேண்டிய தேவை உள்ளது. 1988, 2003, 2016, 2017, போன்ற காலங்களில் எந்த அரசும் தானாக முன்வந்து நமது கோரிக்கைகளை நிறைவேற்றியதாக வரலாறு இல்லை. வருங்காலங்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ-ஜியோ சார்பாக எடுக்கப்படும் முடிவுகளில் நமது பங்கேற்பின் மூலமாகவே நமது கோரிக்கைகளை அரசு அமுல்படுத்தும். பழைய ஓய்வூதியம் இல்லையென்றால், நமக்கு பணிஓய்வுக்காலமே இல்லை என்பதை உணர்ந்து, என்னவிலை (போராட்டம்) கொடுத்தாவது நமது வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுப்போம். எனவே, அளவு மாற்றம் குண மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற வகையில் முழுமையாக பங்கேற்போம். நமது வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுப்போம்.

தோற்றதில்லை, தோற்றதில்லை
தொழிற்சங்கம் தோற்றதில்லை,
கேட்டதில்லை, கேட்டதில்லை,
தோற்ற வரலாறு கேட்டதில்லை.

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**
**Tamilnadu Government Employees' Association**
(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு. திருவல்லிக்கேணி. சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**
மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**
துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அண்ணா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**
மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


நாள்:22.03.2025

பத்திரிக்கை செய்தி

# என்று தணியும் எங்கள் ஓய்வூதிய தாகம், என்று புரியும் எங்கள் கோரிக்கைகளின் நியாயம்!

தமிழ்நாடு அரசின் பட்ஜெட்-2025-26 இன்று தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என அனைத்து தரப்பு மக்களும் பேசு பொருளாக, மீடியாக்களின் விவாதங்களாக இருக்கக்கூடிய எதிர்பார்ப்புக்களும், ஏமாற்றங்களும் என கலந்திருக்கக்கூடிய களமாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.

அரசு ஊழியர்களின் எதிர்பார்ப்பாக இருந்த பட்ஜெட், மிகப்பெரிய ஏமாற்றமாக மாறிய பட்ஜெட். கடந்த அரசிடம் கூட இந்த அளவு ஏமாற்றத்தை அரசு ஊழியர்கள் கண்டிருக்கவில்லை. ஏனென்றால், கடந்த அரசு எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை, கோரிக்கைகள் குறித்து அழைத்துப்பேசவில்லை, போராட்டங்களை கண்டுகொள்ளவில்லை, அதே சமயம் போராடிய ஊழியர்களை நீதிமன்ற வழக்கு (நெல்லை-முருகன்) ஊதிய பிடித்தம் என எதிர் நடவடிக்கைகளை கடைபிடித்தது. அதனால் அந்த அரசைப்பற்றி அரசு ஊழியர்களிடம் எதிர்பார்ப்போ, ஏமாற்றமோ ஏற்படவில்லை. மாறாக ஐந்தாம் வகுப்பு பாடமெடுக்கு ஆசிரியர்கள் 50,000 சம்பளம் வாங்குறார்கள், BE படிச்சிட்டு நம்ம வீட்டு பையன் 15,000 ரூபாய் சம்பளத்திற்கு போகிறான். என அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை ஏளனம் செய்தவர்கள். ஆகவே, கடந்த அரசை எதிர்த்து கடும் போராட்டங்களை நடத்தப்பட்டது. அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டுசெல்லக்கூடிய அரசின் இயந்திரமாக, அரசின் ஒரு அங்கமாக இருக்கக்கூடிய அரசு ஊழியர்களை அரசே ஏளனமாக பேசியதை, ஜீரணிக்க முடியாமல் அந்த அரசை எதிர்த்து வாழ்வா, சாவா என்ற நிலைக்கு தள்ளப்பட்டு போராடினார்கள்.

அப்படிப்பட்ட மதுரையில் நடைபெற்ற போராட்ட ஆயத்த மாநாடு, சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரதம் என அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டக்களத்தில் இருந்தபோது, எங்களில் ஒருவராக போராட்டக்களத்திற்கு வந்து போராடும் அரசு ஊழியர்களை சந்தித்து ஆறுதல் கூறி, கவலைப்படாதீர்கள், நானிருக்கிறேன். கழக ஆட்சி வந்தால் உங்கள் கோரிகக்கைகள் நிறைவேற்றப்படும் (பரிசீலிக்கப்படும் என கூறவில்லை) என கூறினார். அதுமட்டுமல்ல, தேர்தல் வாக்குறுதி பட்டியலில் 309 வது முதல் 318 வது வரை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளை எழுத்துபூர்வமாக அச்சடித்து வெளியிட்டார்கள். இந்த வாக்குறுதி போராடிய அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது. ஆர்வத்தோடு இந்த அரசுக்கு ஆதரவாக குரல்கொடுத்தனர். அது தேர்தல் களத்திலும் எதிரொலித்தது. 11 தொகுதியில் அரசு ஊழியர்களின் வாக்குகள் தீர்மானிக்கக்கூடிய வாக்குகளாக மாறியது. குறிப்பாக ஒரு தொகுதியில் போட்டியிட்ட மூத்த வேட்பாளர், இன்றைய அமைச்சர் வாக்கு எண்ணிக்கையில் தோற்கும் நிலை ஏற்பட்டது. அதன்பிறகு தபால் வாக்குகளை எண்ணிய போது வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். கழகத்தோழர்கள் என்னை கைவிட்டாலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என்னை

கைவிடவில்லை. என வெற்றி குறித்து அறிக்கை வெளியிட்டார். அந்த அளவு இந்த ஆட்சிக்கு ஆதரவு அளித்தனர். இந்த ஆட்சி வெற்றியும் பெற்றது.

ஆட்சி அமைந்ததும் கொரானா இந்த ஆட்சிக்கு பெரும் சவாலாக அமைந்தது. நாங்கள் ஆதரவு அளித்த ஆட்சிக்கு நாங்கள் கைகொடுக்காமல் வேறுயார் கொடுப்பார்கள் என மருத்துவத்துறை, வருவாய்துறை, வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், சாலைப்பணியார்கள் என எல்லா துறை ஊழியர்களும் தங்கள் உயிரை துச்சமென நினைத்து இந்த அரசுக்கு ஆதரவான நின்று கொரானாவை விரட்டிட ஆயிரக்கணக்கில் தங்களது உயிரை தியாகம் செய்து பொதுமக்களை பாதுகாத்தனர், அரசுக்கு ஆதரவு கரம் கொடுத்தனர். கோரிக்கை குறித்து பேசிய போதெல்லாம் கொரானாவால் நிதிநிலை சீரழிந்துள்ளது, எனவே, அரசு பொறுத்துக்கொள்ளச்சொன்னது, ஏற்றுக்கொண்டோம். அதன்பிறகு சென்னை பெறுவெல்லம், தென்மாவட்டங்களில் பெறுவெள்ளம். பெஞ்சால் புயல் என தொடர்ந்து பிரச்சனையை காரணம்காட்டி ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் தள்ளிபோடப்பட்டது. அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு, ஜாக்டோ-ஜியோ வாழ்வாதார கோரிக்கை மாநாடு என நிதிநிலை காரணம் கூறப்பட்டது.

தற்போது நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பும், அடுத்த தேர்தலுக்கு முன்பான இந்த ஆட்சியின் இறுதி பட்ஜெட்டில் கண்டிப்பாக கோரிக்கைகள் நிறைவேறும் என இலட்சக்கணக்கான அரசு ஊழியர், ஆசிரியர்கள் காத்திருந்த நிலையில் பழைய ஓய்வூதியத்திற்கு மாறாக ஒருங்கிணைந்த ஓய்வுதியம் ஆய்வுக்குழு, 01.04.2026 சரண் விடுப்பு என அரசின் பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாள் அறிவிப்பு ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோபத்தை தட்டியெழுப்பியுள்ளது என்பதை அரசு உணரவேண்டும்.

**பயனளிப்பு ஓய்வூதியம்:**

ஒவ்வொரு முறை ஓய்வூதியம் பற்றிய கோரிக்கை வரும்போதெல்லாம் மத்திய,மாநில அரசுகள் முன்வைப்பது இதனால் அரசுக்கு நிதிச்சுமை ஏற்படும் என காரணம் கூறப்படுகிறது. அடுத்து ஓய்வூதியம் பணி ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஏதொ கருணைத்தொகை போல கருதப்படுகிறது.

1950 ஆம்ஆண்டு ஏப்ரல் 17 ஆம் தேதி ஒன்றிய அரசின் முதலாவது ஊதியக்குழுவின் பரிந்துரையில் பங்களிப்பு சேமநலத்திட்டத்தை பொது சேமநலநிதி என அறிவிக்கப்பட்டது. காரணம் அரசு ஊழியரின் பங்களிப்பை அவர் கடனாக பயன்படுத்திக்கொள்ளட்டும், அரசின் தனது பங்களிப்பு தொகையை நாடு சுதந்திரமடைந்து மக்கள் நலத்திட்டங்களுக்கு நிதி தேவைப்படுவதால் தன்பங்களிப்பு தொகையை அரசு விடுவித்துக்கொண்டு அதற்கு பதிலாக அரசு ஊழியர் பணி ஓய்வுபெற்ற பின்பு மாதாமாதம் ஓய்வூதியமாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறு கடந்த1950 முதல் 2003 வரை 53 ஆண்டுகள் அரசு ஊழியர்களுக்கு தரவேண்டிய தொகை பல இலட்சம் கோடி ரூபாயை அரசு பயன்படுத்திக்கொண்டது என்பதுதான் உண்மை. தற்போது மீண்டும் பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தை அரசு 2003 முதல் அறிவித்துள்ளது. இதன் நோக்கம் அரசின் நிதிச்சுமை காரணமல்ல, மாறாக அரசின் பங்களிப்பு தொகையை அரசு செலுத்தி அதை கார்ப்பரேட் நிறுவனங்கள் ஊக வணிகம் மூலமாக பயன்படுத்திக்கொள்ளவதற்கான மடைமாற்ற நிகழ்வாகும். சமூக நலத்திட்டமாக இருந்த பயனளிப்பு பழைய ஓய்வூதியத்திட்டத்தை, நிதி மூலதனமாக மாற்றக்கூடிய புதிய ஓய்வூதியத்திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம், உத்திரவாத ஓய்வூதியத்திட்டம், தேசிய ஓய்வூதியத்திட்டம் என பல்வேறு பெயர்களில் அறிவித்து வருகிறது. அனைத்தும் பழைய பயனளிப்பு ஓய்வூதித்திட்டத்திற்கு இணையாகாது. ஏனென்றால் இந்தபங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தை அமுல்படுத்திய அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகளில் கூட 1998 மற்றும் 2008 களில் நடைபெற்ற உலக பொருளாதார விழ்ச்சியின் போது இந்த பங்களிப்பு திட்டத்தால் பாதிக்கப்பட்டு தெருவில் விடப்பட்டவர்கள் ஓய்வூதியர்கள். இன்றும் 2003 முதல் புதியஓய்வூதிய திட்டத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை சுமார் ரூ.80,000 ஆயிரம் கோடி அரசின் கைவசம் உள்ளது. அதன் வட்டிவிகிதமே பழையஓய்வூதிய செலவினத்தை ஈடுகட்டும். இதனால் அரசுக்கு இழப்பு, நிதிச்சுமை என்பதை ஏற்கவும் முடியாது. காரணம் நிதிச்சுமை என கூறி கடந்த 2003 முதல் பங்களிப்பு ஓய்வூதியம் அறிவிக்கப்பட்டது. அதில் நான்கு கேள்விகளுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்.

- 2003 பழைய ஓய்வூதியத்திட்டம் ரத்து செய்யப்படுவதற்கு முன்பாக நமது மாநிலத்தின் நிதி நிலைமை மோசமாக இருந்ததா? அல்லது நன்றாக இருந்ததா?

- 2003 பழைய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்பட்ட பிறகு கடந்த 22 ஆண்டுகளில் நிதி மிச்சமாகி நிதி நிலைமை சீர் செய்யப்பட்டுவிட்டதா?
- இதுவரை பழைய ஓய்வுதிய திட்டத்தை ரத்து செய்யாமல் வழங்கிக்கொண்டிருக்கும் ஒரே மாநிலம் மேற்கு வங்காளம்...... அங்கு நிதி நிலைமை மோசமாகி விட்டதா?
- தற்போது பழைய ஓய்வூதயத்திட்டம் அறிவித்துள்ள பஞ்சாம், கோவா, ராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம், ஜார்கண்ட், சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் நிதி நிலை மோசமடைந்துவருகிறதா?

மேற்கண்ட கேள்விகளுக்கு தமிழ்நாடு அரசு பதிலளிக்குமா? நிச்சயம் பதிலளிக்கு முடியாது. காரணம் பழைய பயனளிப்பு ஓய்வூதியம் மறுப்பதற்கு காரணம் நிதிச்சுமை கிடையாது. வருவாய்துறையில் e சேவை மையம் போல, மருத்துவத்துறையில் Cristal, கருவூலத்துறையில் Wipro, போக்குவரத்துத்துறையில் Elcot நிறுவனம் போல நெடுஞ்சாலைத்துறையில் தனியார் Tollgate போல அத்திட்டம் அரசிடமிருந்து முழுக்கமுழுக்க தனியார்வசம் ஒப்படைப்பதற்காகவே என்பதை வெளிப்படையான காரணம்.

எனவே, பொய்யான காரணங்களைக்கூறி இந்த அரசின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ள அரசு ஊழியர்/ ஆசிரியர்களை ஏமாற்றாதீர்கள். இவ்வாறு ஏமாற்ற நினைத்தவர்கள் ஏமாந்த போனவரலாறு தமிழ்நாட்டில் நிறைய உண்டு.

சரண்டர் ஒப்படைப்புத்தொகை கோரிக்கை 2025-26 பட்ஜெட்டில் அறிவிக்காமல் 1.04.2026 முதல் என அறிவித்தது அரசுக்கு யார் அளித்த ஆலோசனையோ தெரியவில்லை. இக்கோரிக்கையை அறிவிக்காமல் இருந்திருந்தால் கூட அரசு ஊழியர்/ ஆசிரியர் மத்தியில் கோபம் ஏற்பட்டிருக்காது, மாறாக அடுத்த மாதம் ஏப்ரல் முதல் என அறிவித்தது அரசு தானாக கோபத்தை சம்பாதித்துக்கொண்டது.

சரண்விடுப்பு கோரிக்கை அரசு நிதிச்சுமையாக பாராமல் அதன் உண்மைத்தன்மையை அறிய முற்படவேண்டும். அரசே கடந்த ஆண்டு படித்த வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்திருப்போரின்எண்ணிக்கை 64,22,000 என அறிவித்துள்ளது. ஆனால் அரசுத்துறையில் சுமார் 4,50,000 காலிப்பணியிடங்கள் உள்ளது. நிரப்பிட எவ்வித நடவடிக்கையும் இல்லை அதனால் எந்த அரசுப்பணியும் நின்றுவிடவில்லை. தற்போது பணியிலிருக்கும் அரசு ஊழியர்களே ஒவ்வொருவரும் இரண்டுபேர், மூன்றுபேர் வேலையை கூடுதலாக செய்துவருகிறார்கள். இதனால்,கடும் பணிச்சுமைக்கு ஆளாகியுள்ளார்கள். அலுவலக நேரத்திற்கு பிறகு ஆய்வுக்கூட்டங்கள், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் கூட அலுவலகம் முழு அளவில் இயங்குவது இன்றைய வாடிக்கையாகிவிட்டது. இதனால், மன அழுத்தத்தில், பணிப்பளுவில், நோய்வாய்படுவதும், இதய நோய் ஏற்படுவது உட்பட பல்வேறு உயிலிழப்பு ஏற்பட்டுவருகிறதை நாளிதழ்களில் காணமுடியும். இதனால் அரசு ஊழியருக்கான சொந்த விடுப்புக்களைக்கூட தாங்கள் எடுக்க இயலாமல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள். அவ்வாறு அலுவல் பணிகாரணமாக எடுக்கஇயலாத ஈட்டியவிடுப்பை அரசிடம் ஒப்படைப்பு செய்து அதற்கான ஊதியத்தை பெறும் சரண்விடுப்பு கோரிக்கையை இழுத்தடிப்பது நியாயமல்ல. இந்த சரண்விடுப்பு தொகை போடப்படும் காலத்தை இந்த அரசு அறிய முற்பட்டால் இந்த கோரிக்கையின் நியாயம் புரியும். காரணம், ஒவ்வொருஆண்டும் சரண்விடுப்பு விண்ணப்பம் மே, ஜூன் மாதங்களில்தான் அதிக அளவில் விணணப்பிக்கப்படும். ஏனென்றால் அரசு ஊழியர்கள் தங்களது குழந்தைகளின் பள்ளி கட்டணம், புத்தக கட்டணம், போன்ற கல்விச்செலவுக்கே இந்த தொகையை நம்பியுள்ளார்கள். எனவே, இக்கோரிக்கையை அரசு மறுப்பது, அரசு ஊழியர் குழந்தைகளின் பள்ளிப்படிப்பை மறுப்பதற்கு இணையானது. எனவே, இக்கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து அரசு உடன் நிறைவேற்ற வேண்டும். அதே சமயம் படித்த இளைஞர்களுக்கு ஒரு உத்திரவாதமான வாழ்க்கையை ஏற்படுத்தும் வகையில் அரசுத்துறையில் உள்ள 4,50,000 காலிப்பணியிடங்களை முறையானகாலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும்.அவ்வாறு செய்வதால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்படும் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை விரைவாக மக்களுக்கு கொண்டுசெல்ல முடியும். மேலும், கூடுதல் பணிச்சுமையால் பணிபுரியும் அரசு ஊழியர் இறக்கும் போது நிர்கதியாக

நிற்கும் அக்குடும்பத்திற்கு ஆதரவாக இருப்புது கருணை அடிப்படை நியமனமாகும். அதை 25% மாக இருந்ததை இந்த அரசு கருயையே இல்லாமல் 5% சதமாக குறைத்திருப்பது நியாயமற்றது. எனவே, மீண்டும் கருணையடிப்படை நியமனத்தை 25%மாக உயர்த்திட வேண்டுமென்பது அரசு ஊழியர் / ஆசிரியர்களின் அவசியமான கோரிக்கையாகும்.

தமிழ்நாடு அரசு பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டின் சுயமரியாதையை நிலைநாட்டக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருவது பாராட்டுக்குரியது. அதற்கு மாறாக ஒன்றிய அரசு முயற்சிக்கும் போதெல்லாம் அது ஜாதிவாரி கணக்கெடுப்பு, பொது சிவில் சட்டம், புதிய கல்விக்கொள்கை, என சமூக நலன்சார்ந்த சிந்தனையோடு எதிர் கருத்துக்களை தெரிவிப்பதோடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக, தலைமையேற்று நடத்திவருவது வரவேற்கத்தக்கது. எனவே,இந்த அரசு சமூக நீதிக்கு பாதுகாவலனாக இருக்கும் அரசாக மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஒரு மனிதன் பொருளாதார, சமூக ரீதியாக ஆண்டாண்டுகாலமாக படிப்பறிவு இன்றி பின்தங்கியுள்ள சமூகத்தை முன்னேற்ற பொருளாதார ரீதியாக மேம்படுவது அவசியம். அதற்கு மத்தியதர வர்க்கமான அரசுப்பணியில் அவர்கள் நிரப்பப்படும் போதுதான் அடுத்த தலைமுறை அடுத்தகட்டத்தற்கு உயரும். ஆனால், சமீபகாலமாக அரசுப்பணிகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் என அத்தக்கூலிமுறையில் நியமனம் செய்யப்படுவது சமூக நீதிக்கு எதிரானது. எனவே, மேற்கண்ட நியமனங்களை கைவிட்டு சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், துப்புரவுப்பணியாளர்கள், பலநோக்கு மருத்துவமனைப்பணியாளர்கள், சிறப்பு ஆசிரியர்கள், ஊர்புற நூலகர்கள், MRB செவிலியர்கள், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் PPP மற்றும் COE போன்ற ஊழியர்களை காலமுறை ஊதியத்தில் நிரந்தரம்செய்திட வேண்டும்.

தமிழ்நாடு கல்வி அறிவில் பின்தங்கியிருந்த போது கடந்த 1984 முதல் சத்துணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஊட்டச்சத்து குறைந்த குழந்தைகளை பராமரிக்கவும், ஊட்டச்சத்து நிறைந்த குழந்தைகளாக மாற்றிடவும் அங்கன்வாடி ஊழியர்களின் பங்கு மகத்தானது. அதை தற்போது தேசிய சுகாதாரத்துறை ஆய்வுக்குறியீட்டில் தமிழ்நாடு முன்னேறியிருப்பதை காட்டுகிறது. அவ்வாறு இந்த சமுதாயம் கல்வியறிவில் முன்னேறிட, ஊட்டச்சத்து நிறைந்த சமுதாயமாக மாறிட கடந்த 40 ஆண்டுகளாக பணியாற்றிவரும் ஊழியர்கள் காலமுறை ஊதியம் இல்லாமல், ஓய்வு காலத்தில் கூட சொற்ப ஊதியமாக ரூ.2,000 மட்டும் வழங்குவது அநீதியானது. எனவே, அனைவருக்கும் உணவிட்டவர்கள் அந்திமக்காலத்தில் வயிறார உணவுண்டு கழித்திட குறைந்தபட்ட ஓய்வூதியாக ரூ.9,000 வழங்கிட வேண்டுமென கோருவதை இந்த பட்ஜெட்டில் அறிவிக்க வேண்டும். சாலைப்பணிாளர்களின் 41மாதகால பணிநீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும்.

அனைத்துதரப்பு ஊழியர்களுக்கும் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில் ஆசிரியர்கள் பல பிரிவினர்களுக்கு இன்றும் மறுக்கப்பட்டுவரும் சூழலில் அந்த முரண்பாடுகளை களைந்திடவேண்டும். பணியில் சேர்ந்திடும் போது உத்திரவாதத்திற்கு மாறாக மாவட்ட பணிமூப்புக்கு மாறாக மாநில அளவில் மாற்றப்பட்ட அரசாணை 243ஐ மாற்ற வேண்டுமென்ற கோரிக்கைகள், அரசு கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட அரசாணைகள் அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கும் பொருந்தும் வகையில் மாற்றியமைத்திட வேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தப்பட்டு வரும் சூழலில் 24.02.2025 அன்று அரசு அமைச்சர்கள் குழுவோடு அழைத்து பேச்சுவார்த்தை நடத்திய போது இலட்சக்கணக்கான அரசு ஊழியர்/ ஆசிரியர்கள் கண்டிப்பாக இந்த முறை அரசு கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கும் என எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், அக்குழு மீண்டும் 4வாரகால அவகாசம் கூறிய போது, கடந்த 13.02.2024ல் இதே அமைச்சர்கள் குழு நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவாக எதுவும் இதுவரை அறிவிக்கப்படாத போது மேலும் 4வார கால அவகாசம் கேட்பது காலம்கடத்தும் நடவடிக்கை என கோபத்துடன் தன்னெழுச்சியாக 25.02.2025 மாவட்டத்தலைநகரங்களில் மிக எழுச்சியகரமாக 4,50,000 பேர் பங்கேற்ற கடந்த நான்காண்டுகளில் இல்லாத அளவில் அதிகப்படியான அளவில் கோபாவேசத்தோடு பங்கேற்றனர். இதன் மூலம் ஊழியர்களின் மனநிலையை புரிந்துகொண்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்

என்று எதிர்பார்த்திருந்த வேலையில் 13.03.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது மீண்டும் ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கைவிதையை விதைத்தது. அடுத்தநாள் 14.03.2025 பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்நாளன்று அரசின் அறிவிப்புகள் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இதன் வெளிப்பாடாக நாளை (23.03.2025)அன்று மாவட்டத்தலைநகரங்களில் உண்ணாவிரதப்போராட்டம் கடந்த ஆர்பாட்டத்தை விட அதிக எண்ணிக்கையில் பங்கேற்பார்கள் என எதிர்பாக்கப்படுகிறது. எனவே,தமிழ்நாடு அரசு இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் மேற்கண்டகோரிக்கைகள் குறித்து உறுதியான நிலைபாட்டை எடுக்க வேண்டும். இல்லையேல், 1988ஐப்போல, 2003ஐப்போல, 2016ஐப்போல, வரலாற்றில் பதிக்கக்கூடிய போராட்டக்களம் உருவாகும் என்பதை தமிழ்நாடு அரசிற்கு தெரியப்படுத்துகிறோம்.

வெளிப்பூச்சால் ஒரு கட்டிடத்தை நிலைநிறுத்திவிட முடியாது. எனவே, வெறும் ஆறுதலான வார்த்தைகளால் வயிறு நிறைந்துவிடாது. உங்களால் தான் இந்த அரசு, எனவே **உங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நான் மறுக்கவில்லை, மறைக்கவில்லை,மறுக்கவில்லை** என முதல்வர் அறிவித்ததை அரசு ஊழியர்களும் **மறந்துவிடாதீர்கள், மறைத்துவிடாதீர்கள், மறுத்துவிடாதீர்கள்** என எதிர்பாத்து காத்திருக்கிறார்கள்.1988, 2003ல் நாங்கள் போராட்டக்களத்தில் இருந்தபோது ஆதரவுக்கரம் கொடுத்தது இந்த ஆட்சி. எனவே, மீண்டும் எங்களது கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இன்னமும் எங்களிடம் மிச்சமிருக்கிறது. எனவே, காத்திருக்கிறோம். கனவு நிறைவேறுமா? அல்லது களம்காண்பதா? அரசு தீர்மானக்க வேண்டும் இல்லையேல் அரசு ஊழியர்/ ஆசிரியர்கள் தீர்மானிப்பார்கள்.

பொதுச்செயலாளர்



## சங்கத் தலைவரும் இலக்கியத் தலைவருமான கந்தர்வன்

**– பெரணமல்லூர் சேகரன்**

கந்தர்வன் 1944 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ஆம் நாள் பிறந்தார். இவரது இயற்பெயர் நாகலிங்கம். தமது 29 வயதில் அரசுப்பணிக்கு வந்த கந்தர்வன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பல்வேறு பொறுப்புக்களில் திறம்படப் பணியாற்றிய சிறந்த தொழிற்சங்கவாதி. அவசரநிலை காலத்தில் 19 மாதங்கள் வேலையிழந்து பின்னர் மீண்டும் பணியேற்றவர். கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்த அப்பழுக்கற்ற அலுவலர். 70-களின் தொடக்கத்தில் உருவான மக்கள் எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். பின்னர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவராகித் தம் இறுதிக்காலம் வரை பங்களிப்புச் செய்தவர். எழுத்தாளர் ஜெயகாந்தனால் "இலக்கியச் சிந்தனை' விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட இவரது "மைதானத்து மரங்கள்' கதை, 12-ஆம் வகுப்பு தமிழ்த் துணைப்பாட நூலில் பாடமாக இடம்பெற்றது. பல கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் இடம் பெற்ற இவருடைய படைப்புகள் குறித்துப் பலரும் ஆய்வு நிகழ்த்தியுள்ளனர்.

ஆண்டுதோறும் இவரது நினைவாகச் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. கிழிசல்கள், மீசைகள், சிறைகள், கந்தர்வன் கவிதைகள் ஆகியவை இவரது கவிதைத் தொகுப்புகள் சாசனம், பூவுக்குக் கீழே, கொம்பன், ஒவ்வொரு கல்லாய், அப்பாவும் மகனும் ஆகியவை இவரது சிறுகதைத் தொகுப்புகள். கவிஞர் கந்தர்வன் 2004ஆம் ஆண்டு மறைந்தார்.

(ஏப்ரல் 22: கவிஞர் கந்தர்வன் நினைவு நாள்) ●

DECLARATION

# NATIONAL CONVENTION OF WORKERS

## PYARELAL BHAWAN, NEAR ITO, NEW DELHI

## 18th MARCH, 2025

This National Convention of Workers being held in New Delhi on 18th March 2025, at the call of the Joint Platform of Central Trade Unions and Independent Sectoral National Federations/Associations representing all sections of the working people of our country, takes stock of the alarming situation before the workers and all sections of common people in our country, because of the anti-worker, anti-people policies being pursued by the NDA government at the Centre for the third term.

After managing to come back to power at the centre for the third term through coalition arrangement the Govt has become atrociously desperate to push through its corporate servile policy machinations on the lives and livelihood of the overwhelming majority of toiling populace. This is resulting in continuing phenomenon of deepening and widening impoverishment, spread of hunger and malnutrition below destitution level, skyrocketing unemployment and joblessness together with drastic degeneration of quality of jobs to inhumane level and what-not. Simultaneously, the profit by the corporate and big-business got multiplied to all time high. Even the latest official Economic survey, could not hide the blatant bankruptcy of the perverse policy regime. It exposes that the wages of the informal economy workers have fallen in 2023-2024 from the level of those in the year 2017-2018. On the contrary the employment-increase was only 1.5 percent. Casual male workers were drawing earnings between Rs.203 to Rs.242 whereas women were getting between Rs.128 to Rs.159. The very same report also reflects that the profits of corporate sector grew by 22.3 percent.

Inequalities are rising in our country. 5 percent top population owns 70 percent of wealth whereas for the 50 percent people from the bottom, their share in wealth is 3 percent only. Richest Indians are richer than those of the European billionaires whereas poorest Indians are poorer than Madagascar with poverty having increased by 17 percent during more than ten years of present ruling regime. 90 percent families were termed poorer than international standards in 2018 as per international studies conducted by reputed institutions.

In its third term of governance, this Govt. has become furiously over-active in implementing the Labour Codes, which is a comprehensive blue-print of imposing conditions of virtual slavery on the working people as a whole. These codes would snatch from them almost all rights and entitlements of workers at their workplaces. The CTUs/Federations take it as a serious challenge to all the basic rights of the workers relating to defined working conditions including working hours, minimum wages, social security etc. and also their collective rights to unionization, recognition, collective bargaining, agitations/struggles and any form of collective expressions of protests including right to strike etc. being sought to be snatched away, together with atrocious and vindictive punitive measures against any collective dissents by the workers. In essence the Labour Codes are a blue-print to impose conditions of virtual slavery on the working people in the interests of the corporate/employers' class.

The National Convention notes that the decision of implementing Labour Codes is integral to the ongoing project of the corporate class to drastically curb the basic democratic and constitutional rights of the common people including the rights to freedom of expression and assertion of dissent including collective dissent through numerous enactments like UAPA, PMLA including the latest edition of Bhartiya Nyaya Sanhita (BNS).The numerous administrative and executive measures aimed at rabidly authoritarianise almost all forms of governance with a fascistic intent are being taken. These are aimed at bulldozing all democratic and collective opposition to the pro-corporate, policies against national interest. The collective action, even collective lodging of complaints by the workers and their unions are being sought to be interpreted as "organized crime" as per section 111 of BNS leading to harsh police action including non-bailable imprisonment of the workers and their union leaders. Already such events of criminal actions against workers and union leaders for collectively representing their grievance either to management or even to Labour Department have started taking place in many states implicating trade union leaders and activists in numerous cases. And such a repressive exercise resulted in overactive authoritarian interventions including threats by the employers/management in various industries and establishments including even in various Govt departments towards restraining and virtually prohibiting day to day collective activities of the workers and their unions like holding gate/departmental meetings, distributing leaflets, submitting memorandums etc. and thereby seeking to create an atmosphere of fear among the workers. The united working-class movement cannot remain a silent onlooker to such disastrous machinations on the country and the people.

The Convention upholds the charter of demands formulated by the Joint Platform of Trade Unions through previous national convention on 30.1.2023 covering the basic rights to lives and livelihood of the working people of both the organized and unorganized sector and self-employed occupations, In order to pursue struggle to realise these demands, the implementation of Labour Codes must be stalled and decisively defeated through countrywide united struggles of defiance and resistance by the working class both at national level united actions and also through united sectoral resistance. It is a life and death question for the working-class movement as well as for defending the constitutional and democratic structure of country's governance. Hence the National Convention asserts that the resistance struggle to defeat and scrap the Labour Codes has become central prerequisite in the united struggle of the working class to achieve their just and legitimate charter of demands for a decent and humane working life and also their right to quality employment.

The National Convention considers the all in unity of the toiling people irrespective of religion, caste, community, ethnicity, linguistic and cultural diversities, as a united toiling class, in forthcoming battle for their just and legitimate rights and demands, is of crucial importance. Therefore, it is also most crucial front line task for joint movement of the toiling people to consciously confront all poisonous divisive and conspiratorial machinations on the society as these are meant to weaken and divert the united resistance of the toiling people against the crimes being committed on the people and national economy. The government agenda of Wakf of Board Amendments Bill is brought with the intention of promoting divisive politics. As a diversionary tactics and ulterior motive "one nation one election" agenda is being pushed despite disagreement by the whole opposition.

During last couple of years, the Govt started decriminalizing various defaults/offences by the corporate/big business class through so called Jana-Vishwas Act which is nothing but a license to them to violate various laws including labour laws with impunity. The Govt has decriminalized already 180 offences of corporate/big-business class under 41 legislations including the Boiler Act, Forest Act, Tea Act etc. withdrawing all provisions of imprisonment for any violation of those laws and get scot-free by paying some fines, which is much less than the gains from violations. Again, the Last Union Budget has declared their decision to decriminalize 100 more offences. And such decriminalization of offences by corporate employers also includes violation/non-fulfillment of obligations under many labour laws. All these are being done by the Govt under the dubious and shameless plea of **"Ease of doing Business"**.

Even before the implementation of labour codes, the so-called Shram Samadhan and Shram Suvidha Portals has practically done away with the long-established system of complaint-based inspection of establishments, thereby making labour-law-violations by the employers a free game with continuing impunity.

The entire governance while promoting such perverting process of labour related governance system has without any camouflage opened the entire national exchequer generated by huge tax-burden on the common people for liberal exploitation by handful of corporates through various so-called incentive schemes, production-linked, capex-incentive and latest employment linked incentive scheme. The production linked incentive (PLI) scheme of Rs.1.97 lakh crores for 14 industries in the manufacturing sector, Rs.76000 crores capex incentive to the semiconductor manufacturing industries, and Rs.2 lakh crores of employment linked incentive (ELI) scheme in the process of last two/three years have neither generated any additional employment, nor any worth-noting increase in production in the concerned sector, nor any worthwhile increase in investment which are all matters of record.

On the other hand, we note consistent decline and drastic cut in budgetary allocations in real terms in all people-related heads like MNREGA, Public Health, Education and various other welfare schemes and programmes.

In a nefarious way the Govt is attempting to bring back the provisions of the already-scrapped draconian three farm laws through the recently released Draft National Policy Framework on Agricultural Marketing which is being rightly opposed by the Samyukt Kisan Morcha (SKM). The commitment on Statutory MSP based on C2 plus 50 and ensured procurement based on that basis has not been implemented for which the SKM has been continuing its relentless agitation/struggle activities.

The Govt has notified grossly truncated Unified Pension Scheme (UPS) as an alternative option to New Pension Scheme (NPS) ignoring the just demand of employees for restoration of Old Pension Scheme (OPS). It is reluctantly making halfhearted attempts to implement and also block the implementation of the Supreme Court directions for higher pension under EPS.

Along with continuing its ongoing privatization policy, the Govt is aggressively pursuing its new format of privatization through National Monetization Pipeline (NMP) that too in the infrastructure sector of Roadways, Railways, Airways, Port

and Dock, Telecommunication and also in Mining through the nefarious Mines Developer and Operator (MDO) model enabling loot of public assets at a throw away price, rather almost free in terms of net worth of the assets. 100% FDI in Insurance, amendment to Postal Act doing away with the Govt monopoly over the postal service allowing the private, enabling private corporates in defence manufacturing, research & development, including the space exploration and technology are all done to favour the corporate at the cost of national interests, against which the sectoral struggles of resistance and defiance are mounting across.

The electricity employees are on continuous movement against the handing over of Discoms to the private players as witnessed recently in Chandigarh and Uttar Pradesh. And people across the nation at several places are opposing the installation of smart meters. The recent joint national convention of electricity employees, engineers held at Nagpur on 23rd Feb 2025 has decided to join the joint strike call action of this convention and has also resolved to again go on for sectoral strike on its demands independently on June 26th, 2025.

The recent govt. policy on ship-breaking industries will bring death knell to the livelihood majority of the women who are dependent on this sector for survival.

Is this not a government totally against what we want? We can clearly see that whatever the Govt does is to illegitimately benefit the Corporate Class, the rich people at the expense of vast work force? This ruling dispensation is not only working against the interests of workers, farmers, students, youth, women and the other vulnerable sections of the society, against the intelligentsia etc., but its policies are facilitating the loot of natural resources and the national assets by the Corporate of Indian and foreign brand. These policies are against the national interest.

All our demands are just and legitimate and are also crucial for saving the national economy from disaster and de-growth.

Labour Codes and accompanying restructuring of the entire governance system are aimed at promoting such direly anti-people and anti-national policy regime and therefore defeating and scrapping the Labour Codes through united actions of the working people with a continuity has become the prime task of the hour along with demanding fulfilment of the 17 points of charter of demands of Joint Platform of CTU's and Federations

Indian Labour Conference (ILC), the highest tripartite body has to be convened immediately. ILO Conventions 87, 98, 190 must be ratified. Fundamental Principles of Rights at Work (FPRW) as per ILO Convention 155 and 187 have to be adhered to with regard work place safety and Convention -81 for inspection has to be implemented. ILO Convention 177 on home-based workers and ILO Convention 189 on domestic workers should be ratified immediately.

Immediate halt should be put to the entire privatization drive of Indian Railways, and Road transport, Coal mines and other non-coal mines, Port and Dock, Defense, Electricity, Steel, Petroleum, Postal, Telecom, Banks and Insurance sector etc. in the national interest. The NMP Scheme to be scrapped. The defense ordinance factories are vital for national security and should be in the government sector and corporatization should be rolled back. 100% FDI in Insurance Sector should be stalled along with the scrapping of policy and agency portability.

Rs 26000/- as minimum wage with regular revision every five years with price indexation should be ensured.8th pay commission should be constituted at the earliest. Fixed term employment and Agni Path scheme should be scrapped and outsourcing/ contractualization of Jobs should be stopped. Equal pay for equal work should be ensured. The Government should begin forthwith for recruitments of sanctioned posts and also to revive the lapsed posts. Violation of 8 hours of workday, a hard won right of working class should be curbed. The violation should be dealt with stringent punitive action against the violator establishments.

The New Education Policy meant to encourage commercialization, centralization and communalization in education making it unaffordable for poor, lower and even middle-income groups of society must be withdrawn. Sufficient fund for education and health should be provided.

Non-contributory Old Pension Scheme should be restored. Rs.9000/-minimum Monthly pension under EPS 95 with link to price-index should be ensured. Those not covered under any scheme be given Rs.6000/- per month by creating special fund/corpus through sharing of budgets of the states and the centre.

75 lakh beedi workers, the multifaceted welfare scheme under the previous cess-regime should be restored with govt funding. The social security benefits for more than 57.5 million constructions and other building workers enrolled in the BOCWB's should be substantially improved. 30crores plus e-Shram portal enrolled unorganized workers have to be

covered under social security through necessary budgetary funding. Gig and platform workers to be recognized as workmen and all labour laws be applicable to them. Climate Resilience Fund to cover the risks and damages caused due to extreme climate conditions including heat wave, floods, cyclones, unseasonal rains and so on should be set up. The National policy on migrant workers is urgently needed and interstate Migrant Workers Act 1979 be revived and revisited, strengthened and implementation assured. There is need for changes in immigration policies as well as the protection needs of our international migrant workers.

Indian Labour Conference recommendation to provide worker status to scheme workers-Anganwadi, Asha and Mid-day-meal, Asha Kiran etc. should be implemented and Gratuity to them as per judicial directions must be immediately ensured.

200 days' work per annum with increased minimum wages under MNREGA through sufficient budgetary allocation should be ensured along with expanding it to urban areas as per the recommendation of 43rd ILC.

Hence this National Convention of Workers,calls upon the working people of our country to take united struggles to a higher level of combative resistance both at national and sectoral level through a series of joint actions with a continuity. To begin with, **this National Convention calls for observance of a massive Nationwide General Strike on 20th May 2025** to be preceded by series of preparatory campaign/agitations/mobilizations focusing on our firm determination to continue our resistance struggle to defeat the retrograde Labour Codes to save the people and save the nation.

This National Convention of Workers,while reiterating their demand for the Scrapping of Labour Codes and re-affirming 17-point charter of demands, which projects the alternative to the entire gamut of the disastrous neoliberal policy regime, resolves to make success the **20th May 2025 Nationwide General Strike** and proposes the following actions/programmes throughout the nation for its success:

* Organize state/district/and sectoral conventions in the month of March 2025 to middle of April 2025.
* Organize protest actions as resistance and defiance, very next day once the labour codes implementation announced and thereafter continue extensive campaign to culminate in General Strike on 20th May 2025.
* Undertake intensive campaign at local level and reach out every working people through Padayatras/jeep jathas/cycle jathas/motorbike jathas etc., in the month of April/May 2025.
* In the month of April, a decentralized Nation-wide mobilization to give boost to campaign for strike be organized (Date may be decided later) Delhi mobilization with participation from NCR areas be organized on that day.
* Issue General Strike Notice in the respective sector/industry through the respective unions and federations before 3rd May 2025.
* Issue the General Strike Notice jointly signed by all the Central Trade Unions to the factories even where the Unions are not there at local level latest by 3rd May 2025.
* Multiply the Joint signed appeal for General Strike in millions in the local language and reach out to every worker.
* Hold gate meetings /work place level/ residential area meetings to reach out all sections of workers and the people at large.
* There should be review of activities after the General Strike to further heighten the combat of resistance and defiance to labour codes and anti-people policies to save nation from these anti national policies.

**Onward to massive mobilization and Nationwide General Strike on 20th May 2025**

INTUC    AITUC    HMS    CITU    AIUTUC

TUCC    SEWA    AICCTU    LPF    UTUC

**And Independent National Sectoral Federation/Associations.**

# 23.03.2025 அன்று ஜாக்டோ – ஜியோ மாவட்ட தலைநகர் உண்ணாவிரதம்

தமிழக அரசின் 2025-2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் அரசு ஒப்புக்கொண்ட நீண்டகால 10 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாதது மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியதால் அரசுக்கு எதிர்ப்பை பதிவு செய்யும் வகையில் ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி 23.03.2025 அன்று ஒருநாள் மாநிலம் தழுவிய மாவட்ட தலைநகர் உண்ணாவிரதம் போராட்டம் எழுச்சியாக நடைபெற்றது.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்ட தலைநகரில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் M. பரிதிமால்கலைஞன், S. முருகன், M.சுந்தர்ராஜ், A.சம்பத் மற்றும் B. மாரிமுத்து ஆகியோர் கூட்டுத்தலைமையில்; D. ரமேஷ்பாபு, A. சபரிராஜ், து. ராஜா மாநில உயர்மட்ட குழு உறுப்பினர்கள் முன்னிலையில்; நடைபெற்றது. இப்போராட்டத்தில் 805 பேர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் க. பிரபு, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு. பார்த்திபன், தமிழ்நாடு நிலஅளவை அலுவலர் ஒன்றிப்பின் மாநிலத்தலைவர் து. ராஜா, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் அண்ணாதுரை, தழிழ்நாடு நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் மகாதேவன், தழிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் S. முரளி மற்றும் பட்டு வளர்ச்சி துறை சார்பில் ராஜா மற்றும் பல்வேறு ஆசிரியர் சங்கங்களின் சார்பில்; கண்டன உரை ஆற்றினார்கள். இறுதியில் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மு. பாஸ்கரன் நிறைவுரையாற்றி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு எலுமிச்சம்பழச்சாறு வழங்கி போராட்டத்தினை முடித்து வைத்தார்.

### மயிலாடுதுறை

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக மாவட்ட தலைநகரில் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தோழர்கள் D. இளவரசன், R. செல்வம், U. அன்பரசன், S. சண்முகசுந்தரம் மற்றும் T. ஆதீஸ்வரன் ஆகியோரின் கூட்டுத்தலைமையில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ அமைப்பினர் உண்ணாவிரத போராட்டம் நடத்தினார்கள். தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கழக மாநில துணைச்செயலாளர் தோழர் M. ஞானசேகர் துவக்கவுரையாற்றினார். கோரிக்கைகள் குறித்து அரசு ஊழியர், ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகள் உரையாற்றினார். மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர் தோழர் சு.கலா நிறைவுரையாற்றினார். அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் தோழர் V.பழனிவேலு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். இதில் 1139 பேர் கலந்து கொண்டனர்.

### ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடந்த ஜாக்டோ-ஜியோ உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாவட்டத் தலைவர் முருகேசன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் விஜயராமலிங்கம் ஆகியோர்

தலைமை வகித்தனர். முன்னாள் படைவீரர் நலத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் இளங்கோவன் சிறப்புரையாற்றினார். 500க்கும் மேற்பட்டோர் இப்போராட்த்தில் கலந்து கொண்டனர்.

#### தர்மபுரி

தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பாக ஜாக்டோ-ஜியோ உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கௌரன், சுருளிநாதன், ஆனந்தன், பாஸ்கரன், சாமிநாதன், பெஞ்சமின் ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுசெயலாளர் காமராஜ் உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்து தலைமையுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாநில துணை பொதுசெயலாளர் தோழர் அண்ணா குபேரன் நிறைவுரையாற்றினார். இந்த போராட்டத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும். முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு, ஒப்படைப்பு, உயர்கல்வி ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனே வழங்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டன. இதில் முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர்கள் சேகர், தெய்வானை, காவேரி, இளங்குமரன், முருகேசன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிதிக்காப்பாளர் புகழேந்தி நன்றி கூறினார்.

#### கிருஷ்ணகிரி

ஜாக்டோ ஜியோ சார்பில், தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை எதிரில் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடந்தது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரன், கிருஷ்ணமூர்த்தி, மாரப்பன், மாதப்பன், தங்கதுரை ஆகியோர் தலைமை தாங்கினர். தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு பொதுச்செயலாளர் தோழர் அண்ணா குபேரன் உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்து பேசினார். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர்கள் மாநிலத் தலைவர் தோழர் வாசுகி சிறப்புரை ஆற்றினார்.

#### திருவள்ளூர்

திருவள்ளூரில் டோல்கேட் அருகே நடைபெற்ற உண்ணாவிர போராட்த்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பா. ராஜாஜி, அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் வெண்ணிலா, உடற்கல்வி ஆசிரியர் மற்றும் இயக்குனர் சங்க மாவட்ட செயலாளர் கணேசன், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட தலைவர் ஷேக்கபூர், எஸ். பாலசுந்தரம், பன்னீர் செல்வம் தலைமை தாங்கினர். உண்ணாவிரத போராட்டத்தை உடற்கல்வி ஆசிரியர் மற்றும் இயக்குனர் சங்கமாநில தலைவர் சங்கரபெருமாள் துவக்கி வைத்த டாக்டர் ராதாகிருஷ்ணன் பட்டதாரி ஆசிரியர் கழக மாநில தலைவர் காத்தவராயன், சுந்தர்ராஜன், தோழர் காந்திமதிநாதன், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக செய்தி தொடர்பாளர் பாண்டியன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நிர்வாகி வாசுதேவன், மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்க நிர்வாகி முரளி ஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர். மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழக மாநில பொதுச் செயலாளர் எஸ். ஞானசேகரன் உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்து சிறப்புரையாற்றினார்.

#### கரூர்

கரூர் மாவட்டத்தில் ஜாக்டோ ஜியோ சார்பாக நிலுவைக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி வட்டார போக்குவரத்து அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பா. பெரியசாமி, க. வேலுமணி, பா. தமிழ்மணியன், ஆ. ஆரோக்கிய பிரேம்குமார், எம்.எஸ். ஆன்பழகன், பொன். ஜெயராம் ஆகியோர் கூட்டுத் தலைமை வகித்தனர். உண்ணாவிரதப் போராட்டத்தினை துவக்கி வைத்து தமிழ்நாடு உயர்நிலை

மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழகத்தின் மாநிலத்தலைவரும், ஜாக்டோ ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான திரு. போ. அன்பரசன் துவக்கவுரை ஆற்றினார். உண்ணாவிரதப் போராட்டத்தில் பல்வேறு துறைவாரிச் சங்க நிர்வாகிகள் மற்றும் பல்வேறு ஆசிரியர் சங்க நிர்வாகிகள் கண்டன உரையாற்றினர். இறுதியாக போராட்டத்தினை முடித்து வைத்து ஜாக்டோ ஜியோ மாநில உயர்மட்டக்குழு உறுப்பினரும், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் உடற்கல்வி இயக்குநர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளருமான தோழர் மு. சதீஷ் நிறைவுரையாற்றி, பழரசம் கொடுத்து முடித்து வைத்தார். தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் கே. இளங்கோ நன்றியுரையாற்றினார். இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

**வேலூர்**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஜாக்டோ ஜியோ பேரமைப்பு சார்பில் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜோஷி, ஜோசப் அன்னையா, ஜெயகாந்தன், சீனிவாசன், சகேயு சத்யகுமார் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநில ஒருங்கிணைப்பாளர் மாயவன், மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் ரமேஷ், செ.நா. ஜனார்த்தனன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்;தப்பட்டன. மாநில உயர்மட்ட குழு உறுப்பினர்கள் முகமது ஷாநவாஸ், அக்ரி.ராமன், கோபி உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இந்த போராட்டத்தல் பங்கேற்று கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி முழக்கம் எழுப்பினர். உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பன்னீர்செல்வம் தலைமையில ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

**தென்காசி**

தென்காசியில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுதத வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ அமைப்பினர் மண்சட்டியில் பட்டை நாமம் போட்டு நூதன முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பிச்சைக்கனி, கோபி, சண்முகசுந்தரம், முருகேஷ், ராஜேந்திரன், செய்யது இப்ராஹிம் மூசா ஆகியோர் கூட்டு தலைமை வகித்தனர். தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டடணி மாவட்ட செயலாளர் மாரிமுத்து, தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட தலைவர் ஆரோக்கியராசு, தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் மாவட்ட செயலாளர் கனகராஜ் முன்னிலை வகித்தனர். மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் தோழர் வெங்கடேஷ் துவக்க உரையாற்றினார்.

ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் ராஜ்குமார், மாவட்ட தலைவர் மாரியப்பன், வருவாய்துறை மாவட்ட தலைவர் மாடசாமி, ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட செயலாளர் ராஜசேகர், முதுநிலை பட்டதாரி ஆசிரியர் மாநில துணைத்தலைவர் கலைச்செல்வி, மக்கள் நலப்பணியாளர் சங்க மாநில பொதுச்செயலாளர் புதியவன், சத்துணவு ஊழியர் மாவட்ட தலைவர் தோழர் பிச்சுமணி, சிஐடியு சங்க மாவட்ட செயலாளர் தோழர் மணிகண்டன், அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் வேல்ராஜன், தொழிற்பயிற்சி அலுவலர் சங்க நெல்லை மண்டல செயலாளர் சேகர், வேலை வாய்ப்பு துறை ஊழியர் சங்க பொதுச்செயலாளர் மார்த்தாண்ட ப+பதி, அனைத்து துறை ஓய்வர் சங்க மாநில துணைத் தலைவர் சங்கரி, செல்வகுமார், ஐயப்பன், பாலசுப்பிரமணியன், சண்முகம், முருகையா, ஜெயக்குமார், கிருபா சம்பத் ஆகியோர் வாழ்;த்தி பேசினர். தமிழ்நாடு பணியாளர் சங்க மாநில செயலாளர் துரைசிங் நிறைவு உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர். மாவட்ட நிதி காப்பாளர் சதீஷ் நன்றி கூறினார்.

## தேனி

தேனி பங்களா மேட்டில் நடைபெற்ற உண்ணாநிலை போராட்டத்திற்கு ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ச. தாஜூதீன் தலைமை வகித்தார். உயர்மட்டக்குழு உறுப்பினர் பொ. அன்பழகன் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத்தலைவர் ஜி. மோகன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் க. பெத்தணக்குமார், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற நிர்வாகி பிரிவு, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் சி. பவானி, தமிழ்நாடு மருத்துவதுறை நிர்வாக ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் வை.முத்துப்பாண்டியன், வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் ராமலிங்கம், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் கிருஷ்ணசாமி, மாவட்டச் செயலாளர் ராம்குமார், மூட்டா தலைவர் சி. மாணிக்கராஜ், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் க.முத்துக்குமார் உள்ளிட்டோர் பேசினர். சி.ஐ.டி.யு தேனி மாவட்டச் செயலாளர் எம். ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி. வெங்கடேசன், ஓய்வுதியர் கூட்டமைப்பு, மாவட்ட செயலாளர் பா. ராமமூர்த்தி உள்ளிட்டோர் ஆதரித்து பேசினர். மாநில ஒருங்கிணைப்பாளர் எம்.பி. முருகையன் நிறைவு செய்து பேசினார். நிதி காப்பாளர் செல்லத்துரை நன்றி கூறினர்.

## கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் ஜாக்டோ-ஜியோ அமைப்பு சார்பில உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதற்கு தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் ரமேஷ் தலைமை தாங்கினார். தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்ட தலைவர் அனந்த கிருஷ்ணன், தமிழந்ாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எல். ஆனந்த கிருஷ்ணன், தமிழ்நாடு இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் சங்கமன்ற மாநில அமைப்பு செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் லட்சுமிபதி, மகாலிங்கம், ரஹீம் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன உரையாற்றினார். இதில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்மன்ற மாவட்ட செயலாளர் செல்வராஜ், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்ச மாவட்ட தலைவர் ரவி, தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்ட செயலாளர் முந்தையன் உள்பட 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர்

பெரம்பலூர் கலெக்டர் அலுவலக வளாகம் முன்பு 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமிழ்நாடு பட்டதாரி முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்ட தலைவர் சுந்தரபாண்டியன், அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் குமரி அனந்தன், மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், தமிழக ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் செந்தில்குமார், தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பிரபாகரன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் அருள்ஜோதி ஆகியோர் கூட்டாக தலைமை தாங்கினர். உண்ணாவிரத போராட்டத்தை துவக்க உரையாற்றிய ஆ. ரெங்கசாமி மாநில உயர்மட்ட குழு உறுப்பினர் அவர்கள் ஜாக்டோ-ஜியோவின் போராட்டக் களம் குறித்து விரிவான தனது கருத்தை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் முன்வைத்து ஊழியர்களை போராட்ட களத்தில் தொடர்ந்து இயங்கும் வகையில் மிகவும் சிறப்பான முறையில் பேசியிருந்தார். மாவட்ட குழு உறுப்பினரான மாதவன் உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்து கோரிக்கைகள் குறித்து பேசினார். இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ●

# இந்திய தொழிற்சாலைகள் – நாஜிகளின் சித்திரவதை முகாம்களா? நுகர்வு அதிகரிப்பின் அரசியல்

– க. சுவாமிநாதன்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2025 பொருளாதார ஆய்வு அறிக்கை கார்ப்பரேட்டுகளின் லாபக் குவிப்பு 15 ஆண்டுகளாக இல்லாத உச்சத்தை தொட்டிருக்கிறது, லாபகரமான செயல்பாடுகள் தொழிலாளர்களின் வருமான அதிகரிப்பில் பிரதிபலிக்கவில்லை என்றும் குறிப்பிட்டு இருக்கிறது. பல ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இத்தகைய செல்வ குவிப்பை பற்றி இதற்கு முந்தைய பொருளாதார ஆய்வு அறிக்கைகள் ஏன் பேசவில்லை? இடதுசாரிக் கட்சிகள் தொடர்ந்து இது குறித்து பேசி வந்திருக்கும் நிலையில் தலைமை பொருளாதார ஆலோசகருக்கு இந்த ஆண்டுதான் இந்த உண்மை தெரிய வந்ததா? லாபக் குவிப்பு இவ்வளவு அபரிமிதமாக இருந்த நிலையிலும் கார்ப்பரேட் வரிகள் கடந்த 11 ஆண்டுகளில் 11 சதவீதம் குறைக்கப்பட்ட போது பொருளாதார ஆய்வு அறிக்கைகள் அதை விமர்சித்து தடுப்பதற்கான பரிந்துரைகளை தரவில்லையே? இப்போது பொருளாதார ஆய்வு அறிக்கை பேசுவது தன்னுடைய நம்பகத்தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்கா? அல்லது இந்த பட்ஜெட் ஏதாவது மேற்பூச்சு செய்து கொள்வதற்கான முன்மொழிவா? என்ற கேள்விகள் எல்லாம் எழுந்துள்ளன. இக்கட்டுரை வெளிவரும் நேரத்தில் 2025 பட்ஜெட்டும் வெளிவந்திருக்கும். அதன் உள்ளடக்கம் பற்றிய ஆய்வுகள் மேலும் நமக்கு தெளிவினை தரக் கூடும்

ஆனால் இந்த கேள்விகளுக்கெல்லாம் பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழில் (ஜனவரி 26) பொருளாதார நிபுணர் பிரபாத் பட்நாயக் எழுதியுள்ள "ஏற்றுமதி சார் நுகர்விலிருந்து நுகர்வு சார் வளர்ச்சி நோக்கி செல்கிறோமா?" ("From Export- led to Consumption-led growth") என்ற கட்டுரை நமக்கான வெளிச்சத்தை தருகிறது.

#### கூக்குரல்கள் எதற்காக?

பெரிய பெரிய ஆலோசனை நிறுவனங்களும் , கார்ப்பரேட் வணிக இதழ்களும் உள்நாட்டு நுகர்வை அதிகரிக்க வேண்டும், இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதங்களை உச்சத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற கூக்குரல்களை அண்மைக்காலமாக எழுப்பி வருகின்றன. இந்த கூக்குரல்களில் தற்போது ரிசர்வ் வங்கியின் குரலும் இணைந்து இருக்கிறது. நுகர்வு தூண்டுதலின் மூலம் தொழில் முனைவோருக்கு ஊக்கத்தை உருவாக்க வேண்டும் என்று அது கூறி இருக்கிறது. எதற்காக இந்த திடீர் கூக்குரல்கள்?

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2024- 25 இல் 7% சதவீதமாக இருக்கும் என்பது மதிப்பீடு. ஆனால் 6.5 சதவீதத்தை அது தொடும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீட்டை விட அரை சதவீதம் தான் குறைவாக இருக்கும் என்றால் எதற்காக இந்த கூக்குரல்கள். 6.5 சதவீதம் என்பதே நுகர்வை நல்லதொரு நிலையில் வைத்திருக்கக் கூடிய அளவாகும்.

ஆகவே இந்த கூக்குரல்கள் ஒரு உண்மையை நமக்கு உடைத்துச் சொல்லுகின்றன. அதாவது இவர்கள் மதிப்பீடு செய்கிற, கணிக்கிற மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவுகள் உண்மையல்ல என்பதே. அதீத மதிப்பீடுகளைத்தான் அறிவித்து பெருமை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு சாட்சியம் இந்த கூக்குரல்கள்.

#### யாருடைய நுகர்வை அதிகரிக்க?

நுகர்வு அதிகரிப்பு என்று இவர்கள் பேசுவது யாருடைய நுகர்வு அதிகரிப்புக்காக என்ற கேள்வியும் எழுகிறது. இவர்கள் அதிகரிக்க வேண்டும் என்று சொல்வது கிராமப்புற மக்களின், உழைப்பாளி மக்களின் நுகர்வா? இல்லை. உண்மையில் இவர்கள் பேசுவது விரும்புவது எல்லாம் நகர்ப்புற நடுத்தர வர்க்க மக்களின் நுகர்வே ஆகும். உழைப்பாளி மக்களின் நுகர்வை உயர்த்துவதன் மூலம் பொருளாதாரத்தில் கிராக்கியை அதிகரிக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்? உழைப்பாளி மக்களின் கூலியை ஊதியத்தை உயர்த்த வேண்டும்; குறைந்தபட்ச ஊதிய அளவுகளை உயர்த்த வேண்டும். நுகர்வு அதிகரிப்பு பற்றி பேசுகிற இவர்கள் இதைப் பற்றி எல்லாம் வாய் திறக்கவே இல்லை. மாறாக லார்சன் அண்ட் டியூப்ரோ சி இ ஓ என்ன சொன்னார்? (அவரோடு பெரு நிறுவனத் தலைவர்கள் யாரும் பெரிதாக மாறுபடவில்லை). வாரத்திற்கு வேலை நேரம் 90 மணிகளாக உயர்த்தப்பட வேண்டும் என்றார். இது இந்திய தொழிற்சாலைகளை நாஜிகளின் "சித்திரவதை முகாம்களாக" மாற்றக்கூடியது ஆகும். அங்குதான் சாகும் வரை தொழிலாளர்கள் வேலை பார்த்தார்கள். சாவதற்காகவே வேலை செய்தார்கள். துணைவியரின் முகங்களை வீட்டில் உட்கார்ந்து வெறித்துப் பார்ப்பதை விட, பொழுதுபோக்குக்காக நேரங்களை செலவழிப்பதை விட வேலை பார்ப்பது வாழ்வை வளமாக்கும் என்பதே எல் & டி யின் எஸ்.என்.சுப்ரமணியன் கூற்று. இதே நளினமான வார்த்தைகள்தான் நாஜி சித்திரவதை - மரண முகாம்களின் வாசல்களில் எழுதப்பட்டிருந்தது.

"வேலை உன்னை விடுதலை செய்யும்" என்று. ஆகவே இந்த ஆலோசனை நிறுவனங்களும், ரிசர்வ் வங்கியும் பேசுவது உழைப்பாளி மக்களின் ஊதிய உயர்வை பற்றியது அல்ல.

#### எதிரும் புதிரும் ஆன நலன்கள்

நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் நுகர்வை அதிகரிப்பது பற்றிய இவர்கள் பேசுகிறார்கள். இவர்களின் உண்மையான நோக்கம் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் நலன் அல்ல. நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் நுகர்வு பெரும்பாலும் இந்திய ஏகபோக தொழிலகங்களின் உற்பத்தியை சார்ந்து இருப்பதே காரணமாகும். இவர்கள் நுகர்வு அதிகமானால் அவர்கள் லாபம் அதிகமாகும்.

அதற்காக ஆலோசனை நிறுவனங்களும் ரிசர்வ் வங்கியும் உணவுப் பொருள் பண வீக்கத்தை கட்டுப்படுத்துவது பற்றி பேசுகிறார்கள். உணவுப் பொருள் பணம் வீக்கத்தால் நகர்ப்புற நடுத்தரவர்க்கம் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்களின் பிற பொருள் நுகர்வுகள் குறைகின்றன என்பதே அவர்கள் கூறும் காரணம். ஆனால் உணவுப் பொருள் பண வீக்கத்தால் கிராமப்புற விவசாய வர்க்கத்தினர் பலனடைகிறார்கள். ஆகவே இவர்கள் ஒரு பகுதியினர் நுகர்வை அதிகரிப்பது என்ற பெயரால் அவர்களை விட எளிய மக்களை குறி வைக்கிறார்கள். இதில் இரண்டு கேள்விகள் எழுகின்றன. உணவுப் பொருள் பணவீக்கத்தால் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் இழக்கப்படும் கிராக்கி என்பது உணவுப் பொருள் பணவீக்கத்தால் பயன்பெறுபவர்கள் மத்தியில் உருவாகும் கிராக்கியை விட அதிகமா என்பதே! இரண்டாவது கேள்வி உணவுப்பொருள் பணவீக்கத்தால்

பாதிக்கப்படும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் அப்பயனை சேமிக்கிறார்களா ? செலவழிக்கிறார்களா? என்பதாகும். சேமிக்கிறார்கள் எனில் அது கிராக்கியாக மாறாது. கிராமப்புற உழைப்பாளி மக்களோ தங்கள் கைகளில் கிடைக்கும் வருமானத்தை 100% செலவழித்து விடுகிறார்கள் என்பதே பொருளாதார எதார்த்தம். ஆகவே சேமிக்கிறவர்கள் கைகளில் பொருளாதார முடிவின் பயன்களை தரப்போகிறோமா? இல்லை உடனடியாக சந்தைக்குள் பாய்கிற, கிராக்கியை உயர்த்துகிற கிராமப்புற உழைப்பாளி மக்களின் வருமானத்தை அதிகரிக்கப் போகிறோமா? ஆகவே ரிசர்வ் வங்கி சொல்வது போல உணவுப் பொருள் பண வீக்கத்தை கட்டுப்படுத்துவது என்பது சந்தையில் கிராக்கி உயர்வை நிச்சயம் ஏற்படுத்தாது. தெரிந்தே இதை முன்மொழிவதற்கு காரணம் நகரப்புற நடுத்தர வர்க்கத்தினரின் நுகர்வு ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு உதவுவதே ஆகும்.

### தற்காலிக உந்துதலே

நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் நுகர்வு அதிகரிப்பது நடைபெற்றாலும் அது நிலைத்து நிற்காது என்பதும் முக்கியமான அம்சம். நவீன தாராளமயம், திறந்த வர்த்தகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஊக்கம் பொதுவாக ஏற்றுமதி சார்ந்து இருந்து வருகிறது. அதையே நுகர்வு சார்ந்த வளர்ச்சியாக மாற்றப்போவதாக இவர்கள் கூறுகிறார்கள். சில நேரம் இத்தகைய ஊக்கங்கள் தற்காலிக உந்துதலை பொருளாதாரத்தில் தரும். உள்ளூர் சொத்து விலைகள் நீர்க் குமிழிகள் போன்று மாறுதல்களை அடையும்போது பொருளாதாரத்தில் சில நேரம் நுகர்வு அதிகரிப்பு நடைபெறும். கடன் மூலமாக நுகர்வு ஊக்குவிப்பும், எளிமையான கடன் நடைமுறைகளும் சந்தையில் கிராக்கியை அதிகரிப்பதாக தோன்றும். பின்னர் அந்தக் கடன் சுமைகளை நுகர்வை குறைக்க ஆரம்பிக்கும். உணவுப் பொருள் பண வீக்கமும் அப்படித்தான். தற்காலிக உந்துதலை தரும் அப்புறம் நின்று போகும். எத்தகைய நுகர்வு நிலைத்த ஊக்கத்தை பொருளாதாரத்தில் உருவாக்கும்? அத்தகைய நுகர்வு யார் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும்? அதை உருவாக்க வெளியில் இருந்து எத்தகைய தலையீடு தேவைப்படுகிறது? ஆகியனவே இந்த விவாதத்தின் முக்கியமான அம்சங்கள் ஆகும்.

### அரசு முதலீடுகளின் அதிகரிப்பே தேவை

அரசு செலவினத்தில் அதிகரிப்பு ஏற்படுவது நுகர்வோர் கைகளில் வாங்கும் சக்தியை அதிகரிக்கும். ஆனால் அரசு முதலீடுகளில் அதிகரிப்பு நடைபெற வேண்டும் என்றால், நிதி பற்றாக்குறை விரிவடைவதை அனுமதிக்க வேண்டும். நுகர்வைக் கடந்து சேமிக்க முடிகிற வர்க்கங்களின் மீது வரிகளை உயர்த்த வேண்டும். இப்படி செய்யாமல் சேமிக்க இயலாதவர்கள் மீது வரிகளைப் போட்டால் எவ்வளவு வரிகளை அவர்கள் மீது போடப்படுகிறது அதற்கு ஈடான கிராக்கி இழப்பு சந்தையில் ஏற்படும்.

ஆகவே நுகர்வு சார் தொழில் ஊக்கம் நிகழ வேண்டும் என்றால் விவசாய வளர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும். விவசாய வருமானம் அதிகரிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஆதரவான கொள்கைகள் அமலாக்கப்பட வேண்டும். கார்ப்பரேட் ஆதரவு, விவசாய வர்த்தக பெருநிறுவன ஆதரவு கைவிடப்பட வேண்டும். ஆனால் இவற்றையெல்லாம் நவீன தாராளமய சட்டகம் அனுமதிக்குமா?

நவீன தாராளமய பாதையில் பயணிக்கும் ஒன்றிய ஆட்சியாளர்கள் நேர் எதிரான திசையில் பயணிக்கிறார்கள். கார்ப்பரேட் விவசாயத்திற்கு ஊக்கமளிக்கிறார்கள். இது விவசாயிகளின் வருமானத்தை சுருக்கும். மேலும் கிராக்கியை பாதிக்கும். ஆகவே

நுகர்வு அதிகரிப்பு என்றாலும் நகர்ப்புற நடுத்தர வர்க்க மக்களையே குறி வைத்து செய்வார்கள். இதன் பொருள் அவர்கள் நலனில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இருக்கிறது என்பது அல்ல.

**சீன அனுபவம்**

நவீன தாராளமய பாதையை கடந்து செல்வது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை. நிதிப் பற்றாக்குறையை விரிவுபடுத்தி அரசு முதலீடுகளை அதிகரிக்க வேண்டுமெனில் அதை நவீன தாராளமய பொருளாதாரப் பாதை அனுமதிப்பதில்லை. சட்ட ரீதியான தடைகளே உள்ளன. இந்தியாவின் "நிதிப் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை சட்டம்" (FRBM) ஒரு உதாரணம். நவீன தாராளமய சாட்டை சொடுக்கும் போது எதிர்ப்பு தெரிவிக்க கூட வாய்ப்பு இல்லாமல் கட்டி வைத்து அடிப்பதுதான் இத்தகைய சட்டங்கள்.

கார்ப்பரேட் வரிகள் உயர்த்தப்பட்டால் மூலதனம் நாட்டை வெளியேறி விடுவதாக மிரட்டுகிறது. அப்படி வெளியேறும் போது அது அந்நிய செலாவணி நெருக்கடியை உருவாக்கும். இதனால் சில பொருட்களை நுகர முடியாத நிலை ஏற்படும் . இதற்கெல்லாம் மக்களை தயார் செய்யாவிடில் நவீன தாராளமய கட்டத்தை கடப்பது கடினம். சீனா ஒரு மாறுபட்ட உதாரணம். நவீன தாராளமயக் கட்டை மீறி அதனால் பயணிக்க முடிகிறது. சர்வதேச நிதி மூலதனத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு அது அடி பணிவதில்லை. சந்தையை திறந்து விடுமாறு மேலை நாடுகள் சீனாவை எளிதாக நிர்ப்பந்திக்க முடிவதில்லை. காரணம் சீனா வர்த்தக உபரி வைத்திருக்கிறது; நடப்புக் கணக்கு பற்றாக்குறை பிரச்சனை பெரிதாக இல்லை.

**வழி என்ன?**

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் நவீன தாராளமயக் கட்டத்தை எளிதாக கடக்கிற அரசியல் உறுதியோடு இல்லை. சிறிய நாடுகள் அமெரிக்கா தலைமையிலான மேலாதிக்க நாடுகளின் நிர்ப்பந்தத்தை எதிர்கொள்ள முடியாமல் அடி பணிந்து போகின்றன. நிதி மூலதனத்தின் வரவு, எல்லை தாண்டும் வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் இல்லாததால் அவர்களால் அந்நியச் செலாவணி பற்றாக்குறை நெருக்கடியை எதிர்கொள்ள முடியாத சூழல் உள்ளது. ஆனால் ரிசர்வ் வங்கி மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் எல்லாம் ஏதோ இந்திய அரசு மிக சுதந்திரமாக இயங்குவது போல பாவனை செய்கின்றன. நவீன தாராளமய இயங்கியல் குறித்த அறியாமையை அவர்கள் அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

நவீன தாராள மயக் கட்டமைப்பை மீறி செல்கிற அரசியல் உறுதியை வெளிப்படுத்துவதும், கொள்கைகளை வகுப்பதுமே வழியாகும். ●




**கேரளாம் மாநில KNGO அமைப்பின் மாநிலத்தலைவர் தோழர் M.V.சசிதரன் அவர்களுடன், தோழர்கள் K.விஜயகுமார், V.K. உதயன், K. அம்சா மற்றும் K.V. மனோஜ்குமார் ஆகியோர் மதுரை MRA சங்க கட்டடத்திற்கு வருகை தந்த நிகழ்வு.**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005
28441286 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

கடித எண்: 3/2025 நாள்: 10.03.2025

பெறுநர்:

இயக்குநர்,
பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை,
DMS வளாகம்,
தேனாம்பேட்டை,
சென்னை - 600 018

ஐயா,

பொருள்: பணியமைப்பு - சேலம் மண்டலம் - பூச்சியியல் அலுவலகம் - ஊழியர்களின் மாற்றுப்பணி ஆணை - இரத்து செய்திட கோருதல் சம்பந்தமாக.

பார்வை: இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகம், சென்னை.6-அவர்களின் ந.க.எண். 2377570/பூத2/இரு2/2024, நாள்: 31.01.2025.

சேலம் மண்டலம் பூச்சயியலம் அலுவலகத்தில் அலுவலர் அவர்களின் ஊழியர் விரோதப்போக்கின் காரணமாக அவ்வலுவலகத்தில் பணிபுரிந்துவரும் ஆய்வக நுட்பனர்கள், களப்பணியாளர்கள் ஆகியோர் கடுமையான மன உளைச்சலுக்கும், மனஅழுத்தத்திற்கும் உள்ளானார்கள். இதனை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உயர் அதிகாரிகளுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் கொண்டு சென்றதன் விளைவாக உரிய விசாரணை செய்து ஊழியர் விரோதப்போக்கை கையாண்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதே நேரத்தில் எந்தவித தவறும் செய்யாத பாதிக்கப்பட்ட ஊழியர்கள்திருமதி.J.சுதா, திருமதி.S.பூர்ணம், திரு.S.கண்ணன் ஆகியோரும் மாற்றுப்பணியில் நீண்டதூரம் இடமாறுதல் செய்யப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஊழியர்களும் துறையின் ஆணையை ஏற்கும்பொருட்டு மாற்றுப்பணியில் பணிபுரிந்து வருகிறார்கள். மிகக்குறைவான ஊதியத்தில் பணிபுரிந்துவரும் பாதிக்கப்பட்ட ஊழியர்களை துறை நிர்வாகம் கனிவோடு பரிசீலனை செய்து அவர்கள் ஏற்கனவே பணிபுரிந்த இடத்தில் இடமாறுதல் ஆணை வழங்கிட ஆவண செய்திட கேட்டுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| **(மு. பாஸ்கரன்)** | **(மு. சீனிவாசன்)** |
| மாநிலத்தலைவர் | பொதுச்செயலாளர் |
| செல்.9442409442 | செல்.9443845602 |

# மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் - கருத்தரங்கம் மற்றும் மனித சங்கிலி

**தஞ்சாவூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தஞ்சை மாவட்டத்தின் சார்பாக சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் A.R. கவிதா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாநில துணை பொதுச்செயலாளர். V. சோமசுந்தரம் துவக்கவுரை ஆற்றினார் மாவட்ட தலைவர் தோழர் ஆ.செந்தில்குமார், மாவட்டச் செயலாளர் தோழர் ரமேஷ் வாழ்த்துரை வழங்கினார் அனைத்து இந்திய ஜனநாயக மாதர் சங்க மாநில செயலாளர் தோழர் எஸ். தமிழ்ச்செல்வி மாநிலச் செயலாளர் தோழர் சு.வளர்மாலா கருத்துரையாற்றினர் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆ. ரங்கசாமி அவர்கள் சிறப்புரை ஆற்ற மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் மு.ஹேமலதா நன்றியுரை கூறினார் இந்த நிகழ்வில் மகளிர் துணைக்குழு அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து வட்ட கிளைகளை முன்னணி பெண் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

**திருவாரூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருவாரூர் மாவட்டம் சார்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் இணைந்து மகளிர் தின கருத்தரங்கமும் தெற்கு வீதியில் மனித சங்கிலி போராட்ட நிகழ்வும் மாவட்டத் தலைவர் தோழர் எஸ்.சுதாகர் மற்றும் பி.சண்முகம் அவர்களின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது இதில் அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் குரு. சந்திரசேகரன் துவக்கயுரை ஆற்றினர் மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் டி.தமிழ் சுடர், தோழர் பி. புவனேஸ்வரி மாவட்ட துணைத் தலைவர் கருத்துரை வழங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநிலச் செயலாளர் தோழர் செ.பிரகாஷ் நிறைவுறை ஆற்றினார் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதிய சங்க மாவட்ட செயலாளர் தோழர் வி.முனியன் நன்றி உரை கூறினார் மற்றும் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளத்தின் அறைகூவல் தீர்மானத்தின் படி திருவாரூர் தெற்கு வீதியில் அனைத்து மகளிர் துணைக்குழு தோழர்கள் மற்றும் முன்னணி பெண் தோழர்கள் பதாகைகளை ஏந்தி மனித சங்கிலி நிகழ்வை வெகு சிறப்பாக நடத்தினர்.

**தென் சென்னை, வடசென்னை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தென் சென்னை ,வடசென்னை மாவட்டம் சார்பாக மகளிர் தின கருத்தரங்கம் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் து. அஸ்வினி கிரேஸ் ஜெயப்பிரியா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் மு.செல்வராணி பாவையர் மலர் பத்திரிக்கை நிறுவனர் தோழர் பா.வான்மதி கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில பொருளாளர் தோழர் சா.டேனியல் ஜெய்சிங் சிறப்புரையாற்றினார் சைதை நந்தனம் பகுதி குழு தலைவர் தோழர் மூ.மங்கை அவர்கள் நன்றியுரை கூற இந்த நிகழ்வு இனிதே நடைபெற்றது மகளிர் தோழர்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

**கிருஷ்ணகிரி**

சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் K.ஜெகதாம்பிகா தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது மாவட்டத் துணைத் தலைவர் ஜெயபிரபா வரவேற்புரை ஆற்றினார் ரௌத்திரம் பழகு என்ற தலைப்பில் அகில இந்திய துணைத்தலைவர் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் தோழர் உ.வாசுகி கருத்துரை வழங்கினர் இந்த நிகழ்வை மாவட்ட தலைவர் தோழர் பி சந்திரன் ஒருங்கிணைத்தார் திருமதி என் பழனிதேவி ,திருமதிரா. மலர்விழி, திருமதி தா. பத்மலதா ,திருமதி ரா.சக்தி சுபாஷினி திருமதி ரா.ஜெயந்தி வாழ்த்துரை வழங்கினார்கள் மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் முழுமையாக இந்த நிகழ்வில் பங்கேற்றனர் மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் தோழர் கே.கனகவல்லி நன்றி உரை கூற இந்த நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

### கோயம்புத்தூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோவை மாவட்டத்தின் சார்பாக மகளிர் தின கருத்தரங்கமும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மனித சங்கிலி இயக்கமும் மாவட்ட மகளிர் குழு அமைப்பாளர் தோழர் வி.சாந்தி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் தோழர் ஜெகநாதன் இதை ஒருங்கிணைத்தார் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் மாவட்ட தலைவர் தோழர் ஜோதிமணி இந்த நிகழ்வை துவங்கி வைத்தார் மாவட்ட செயலாளர் தோழர் பா.செந்தில் குமார் தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்க மாநிலத் துணைத் தலைவர் தோழர் நடராஜன் கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில பொதுச் செயலாளர் பிரகலதா தமிழ்நாடு சத்துணவு சங்க மாநில செயலாளர் நிர்மலா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணை பொதுச்செயலாளர் தோழர் வி. சோமசுந்தரம் நிறைவேறியாற்றினார் நிறைவாக மகளிர் துணை குழு உறுப்பினர் நதியா அவர்கள் நன்றியுரை கூற கருத்தரங்கம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

### மதுரை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரை மாவட்டத்தின் சார்பாக மடீட்சியா மஹால் முன்பு மனித சங்கிலி இயக்கம் மற்றும் கருத்தரங்கம். மாவட்டத் தலைவர் தோழர் இரா. தமிழ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் எம்.ரம்யா வரவேற்புரை ஆற்றினார் மகளிர் துணைக்குழு அமைப்பாளர்கள் முன்னிலையில் வகித்தனர் மாநிலச் செயலாளர் தோழர் ஆ.ஜெசி துவக்கவுரை ஆற்றினார் மாவட்ட செயலாளர் தோழர் கா. சந்திரபோஸ் நோக்க உரையாற்றினார். எழுவாய் பெண்ணே எதையும் வெல்ல என்ற தலைப்பில் மதுரை மாநகராட்சியினுடைய வணக்கத்துக்குரிய மேயர் வி.இந்திராணி பொன்வசந்த் அவர்களும் தலைமைப் பெண்ணின் மகத்துவம் பெண்ணே என்ற தலைப்பில் மதுரை மாநகராட்சியின் ஆணையாளர். திருமதி.சித்ரா விஜய் அவர்களும் கருத்துரை ஆற்றினார்கள். மாநிலச் செயலாளர் க. நீதிராஜா அவர்கள் நிறைவுறையாற்ற மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் சி.க சுஜாதா அவர்கள் நன்றியுரை கூற இந்த நிகழ்வில் அரசு ஊழியர் சங்க பெண் தோழர்கள் முழுமையாக பங்கேற்றனர் சிறப்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

### இராமநாதபுரம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ராமநாதபுரம் மாவட்டம் சார்பாக மகளிர் தின சிறப்பு கருத்து அரங்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் விஜயராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் வினோதினி வரவேற்றார் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர்கள் ரோசாநராபேகம் டி.கலா ஆகியோர் முன்னிலை வகித்தனர் மாவட்ட செயலாளர் அப்துல் நஜ்முதீன் துவக்க உரையாற்றினார் முன்னாள் மாவட்ட தலைவர் முருகேஸ்வரி முன்னாள் மாவட்ட செயலாளர் சேகர் அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்க மாவட்ட செயலாளர் மல்லிகா கால்நடை ஆய்வாளர் சங்கம் மகளிர் அமைப்பாளர் பூபதி மீன்வளத்துறை ஊழியர் சங்க மகளிர் அமைப்பாளர் மோனிகாசெல்வி எம்ஆர்பி செவிலியர் மேம் மேம்பாட்டுச் சங்க மாவட்ட தலைவர் தனலட்சுமி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர். நீதிராஜா நிறைவுறையாற்றினார் இந்த நிகழ்வை மாவட்ட நிர்வாகிகள் சரவணன், வேலுச்சாமி, முத்துசாமி, சந்திர மோகன், பாண்டி, மெய்ய சக்தி மற்றும் பாலுச்சாமி கலந்துகொண்டு நிகழ்ச்சி ஒருங்கிணைத்தனர்.

### நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சார்பாக மகளிர் தின கருத்தரங்கு மற்றும் மனித சங்கிலி ஆர்ப்பாட்டம் நீதிமன்ற வளாக முதல் தம்பிதுரை பூங்கா வரை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் வே.சித்ரா தலைமையில் நடைபெற்றது.

மானமும் அறிவும் மகளிர்க்கு அழகு என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் தோழர் சு. வளர் மாலா அவர்கள் துவக்க வுரையாற்றினார். வையத் தலைமையில் பெண்கள் என்ற தலைப்பில் தோழர் ஜ.ஜம்ருத்நிஷா மாவட்ட இணைச்செயலாளர் தோழர் டி.செந்தமிழ் செல்வி இனி ஒரு விதி செய்வோம் என்ற தலைப்பில் தோழர்.பாலம்மாள், ஜமுனா ராணி, தோழர் சகிலா,தோழர் ஜோதிலட்சுமி கலந்துகொண்டு கருத்துரை ஆற்றினார்கள் சங்கப் பணி நேற்றும் இன்று நாளை என்ற தலைப்பில் முன்னாள் மாவட்ட தலைவர் தோழர் பா. ராணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார் திக்கட்டும் ஒலிக்கட்டும் பெண்ணியம் என்ற தலைப்பில் மாநில துணைத்தலைவர் தோழர் மு.செல்வராணி

நிறைவுறையாற்றினார் மாவட்ட துணை தலைவர் தோழர் த.சசிகலா நன்றியுரை கூற இந்த நிகழ்வு இனிதே நடைபெற்றது.

**மயிலாடுதுறை**

மயிலாடுதுறை மாவட்டம் சார்பாக சர்வதேச மகளிர் தின மனித சங்கிலி நிகழ்வு மாவட்ட துணைத் தலைவர் தோழர் எம். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் தோழர்.டி. இளவரசன் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம் என்ற பாரதியின் வரிகளை வலியுறுத்தி இன்றைய நிலையில் பெண்களின் நிலைமை சங்கத்தில் அவர்களின் பங்கு என்ன என்பதை பற்றி விரிவாக எடுத்துரைத்தார் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் துறை சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் C.லதா வேளாண்மை துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் R.வனிதா உள்ளிட்ட துறை வாரிச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள் மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் டி. கணேசன் அவர்கள் சிறப்புரை ஆற்ற இந்த நிகழ்வு இனிதே நடைபெற்றது.

**காஞ்சிபுரம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காஞ்சிபுரம் மாவட்டம் சார்பாக மகளிர் தின சிறப்பு கருத்து அரங்கம் தமிழ்நாடு வருவாய்துறை கட்டிட வளாகம் காஞ்சிபுரத்தில் மாவட்டத் தலைவர் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர் வி.ரமணி வரவேற்புரை ஆற்றினர் மகளிர் துணை குழு அமைப்பாளர்கள் முன்னிலை வகித்தனர் மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் எம்.ஆர்.திலகவதி வாழ்த்துரை வழங்கினர் தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர்வெ. லெனின் "போராட்ட களத்தில் பெண்களின் பங்கு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார் "புதுமைப் பெண்களும் நீயே புரட்சி நாயகியும் நீயே" என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் டி.மருதன் சிறப்புரை ஆற்றினர் மேனாள் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் எம்.பி.திலகம் நிறைவுறையாற்றினார் மகளிர் துணைக் குழு அமைப்பாளர் கே. பூங்கொடி நன்றியுரை கூற கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

**தென்காசி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தென்காசி மாவட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி 114வது சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் தென்காசி முன்பு மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது.இந்நிகழ்வினை மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர்.செல்வி தலைமை தாங்கினார்.மாவட்ட செயலாளர் தோழர்.வெங்கடேஷ் கோரிக்கை விளக்க உரையாற்றினார். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர்.பிச்சுமணி தமிழ்நாடு பட்டுவளர்ச்சித்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர்.ஜெயலட்சுமி தமிழ்நாடு எம்ஆர்பி செவிலியர் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்ட செயலாளர்தோழர்.பெலிக்ஸ் மோனிகா தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் முன்னணி தோழர் தோழர்.ராஜேஸ்வரி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தோழர்.சங்கரி நிறைவுறையாற்றினார்.

**கள்ளக்குறிச்சி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கள்ளக்குறிச்சி மாவட்டம். சர்வதேச மகளிர் தினம் ,மனித சங்கிலி இயக்கம் மற்றும் மகளிர் கருத்தரங்கம் நமதுமாநில செயற்குழு முடிவின்படியும் AISGEF வழிகாட்டுதல் படியும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உலக மகளிர் தின மனித சங்கிலி இயக்கம் பழைய அரசு மருத்துவமனை முன்பு நடைபெற்றது இதில் அனைத்து துறைவாரி சங்க பெண் தோழர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டு பெண்ணுரிமை குறித்த பதாகைகள் மற்றும் சங்கத்தின் பதாகைகளை கையில் ஏந்தி கைகோர்த்து மனித சங்கிலியாய் நீண்டு இருந்தனர். பின்னர் அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற திறந்தவெளி கருத்தரங்கத்திற்கு மாவட்ட தலைவர் தோழர் ரவி தலைமை வகித்தார் மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர் சந்திராமேரி வரவேற்புரை ஆற்றினார் கருத்தரங்கத்தை அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் தேவி துவக்கி வைத்து பேசினார், தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்க மாநில துணைத்தலைவர் தோழர் வேளாங்கண்ணி மற்றும் பூவாள், அய்யாயிரம்,வள்ளி, கால்நடை மருத்துவ துறை மாவட்ட நிர்வாகி தோழர் சுதா, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் வள்ளி, செயலாளர் விஜயா, ஒன்றிய தலைவர்கள் முத்துவள்ளி, ராஜகுமாரி,இளமதி,செல்வி, தமிழ்நாடு அனைத்து மருந்தாளுனர் சங்க

மாவட்ட செயலாளர் தோழர் மலர்கொடி, ஆசிரியை அன்பரசி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினார்கள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் தோழர் ஆனந்தகிருஷ்ணன் கருத்தரங்க விளக்க உரையும் மாநில துணைப் பொதுச் செயலாளர் தோழர் மகாலிங்கம் சிறப்புரையும் ஆற்றினார்கள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாவட்ட தலைவர் சுதா நிறைவுறையாற்றினார் இறுதியில் மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் தோழர் காஞ்சனாமேரி நன்றி உரையாற்றினார்.

**சேலம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சேலம் மாவட்டம் மனித சங்கிலி இயக்கம் அனைத்து அரசு அலுவலகங்களிலும் விசாகா கமிட்டி அமைக்கிட வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது. அரசு அலுவலகங்களில் விசாகா கமிட்டி அமைத்திட வேண்டும். இரவு நேர ஆய்வு கூட்டங்களை கைவிட வேண்டும். பெண்களுக்கான சிறப்பு அனுமதி சிறப்பு விதிமுறைகளை அனுமதிக்க வேண்டும். பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். காலை உணவுத் திட்டத்தை சத்துணவு ஊழியர்களுக்கு வழங்க வேண்டும். அரசு அலுவலகங்களில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பணி நேரத்தில் விதிப்படி வேலையை நடைமுறைப்படுத்த வேண்டும். சர்வதேச மகளிர் தினத்தை விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும். காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும். வன்முறைக்கு எதிரான சட்டங்களை கடுமையாக அமல்படுத்த வேண்டும். காலப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது. மகளிர் துணை குழு அமைப்பாளர் ராணி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சுரேஷ் மாவட்ட பொருளாளர் சண்முகம் மாவட்ட நிர்வாகிகள் அரசு ஊழியர்கள் பெண்கள் என திரளானோர் பங்கேற்றனர்.

**திண்டுக்கல்**

பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி படுத்த வலியுறுத்தி திண்டுக்கல்லில் நடைபெற்ற மனித சங்கிலி மாவட்ட தலைவர் முபாரக் அலி தலைமையில் மாவட்ட செயலாளர் சுகந்தி விளக்க உரையாற்றினார் ராஜாத்தி மாவட்ட மகளிர் துணை குழு சுந்தரி மாவட்ட செயலாளர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் ஜெயகொடி மாநிலச் செயலாளர் மருத்துவ துறை நிர்வாக ஊழியர் சங்கம் ஆகியோர் கருத்துரை ஆற்றினர் மாவட்ட பொருளாளர் மகாலிங்கம் நன்றி கூறினார்.

**கடலூர்**

மாநில மையத்தின் முடிவின்படி சர்வதேச மகளிர் தினத்தன்று மகளிர்கான கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி மனித சங்கிலி ஆக நின்று அதன்பிறகு மகளிர்க்கான விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.இந்த நிகழ்வு கடலூர் மாவட்ட மையத்தின் சார்பாக சிதம்பர வட்ட கிளையில் நடைபெற்றது.

**தர்மபுரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தர்மபுரி மாவட்டத்தின் சார்பாக சர்வதேச மகளிர் கருத்தரங்கம் மாவட்ட செயலாளர் தோழர்.A. தெய்வானை தலைமையில் மகளிர் துணைக் குழு உறுப்பினர்களின் முன்னிலையில் நடைபெற்றது மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் தோழர் P.மகேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட தலைவர் தோழர் M.சுருளி நாதன் இந்த நிகழ்வை ஒருங்கிணைத்தார். "ஆணும் பெண்ணும் நிகரன கொள்ளுவதால்" என்ற தலைப்பில் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஜி. பழனியம்மாள் கனவுகள் மெய்ப்பட களம் காண்போம் என்ற தலைப்பில் மாநில துணை பொதுச்செயலாளர் தோழர் அண்ணா குபேரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள் மாவட்ட இணைச் செயலாளர் தோழர் தேவகி நன்றியுரை கூற இந்த நிகழ்வு இனிதே நடைபெற்றது.

**நாமக்கல்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நாமக்கல் மாவட்டத்தின் சார்பாக கவின் கிஷோர் திருமண மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.கோமதி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது மாவட்ட மகளிர் குழு உறுப்பினர் ஜி.ஜானகி வரவேற்புரையாற்றினார் ,"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம்" என்ற பாரதியின் வரிகளை முன்னிறுத்தி மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர் மு. செல்வராணி சிறப்புரையாற்றினார் மாவட்ட செயலாளர் தோழர் இரா.முருகேசன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வாழ்த்துரை வழங்கினர் தோழர்

வி. அமுதா நன்றியுரை கூற இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

### தூத்துக்குடி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில மைய முடிவின்படி தூத்துக்குடியில் அரசு ஊழியர் சங்கம் முன்பாக 100க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட மனித சங்கிலி காலை மாநிலச் செயலாளர் தோழர் மைக்கேல் லில்லி புஷ்பம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மகளிர் கருத்தரங்கம் தூத்துக்குடி அரசு ஊழியர் சங்க கட்டிடவளாகத்தில் நடைபெற்றது. கருத்தரங்கினை தலைமையேற்று மாவட்ட செயலாளர் தோழர் .ஜெ. உமாதேவி நடத்தினார் . அஞ்சலி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் மகேஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் கருத்தரங்கு நடைபெற்றது. முனைவர் . மா .ல. ராஜேஸ்வரி பேராசிரியர் "அக்னி சிறகுகளாய் பெண்கள்" என்னும் தலைப்பில் துவக்க உரையாற்றினார். ஜனநாயக மாதர் சங்க மாவட்டச் செயலாளர் தோழர். பூமயில் அவர்கள் கருத்துரை வழங்கினார். மாவட்டத் தலைவர் தோழர். சோ. மகேந்திர பிரபு மாநிலத் துணைத் தலைவர் தோழர் தே. முருகன் மேனாள் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தோழர். என். வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவுரையாக தோழர். இ.மைக்கேல் லில்லி புஷ்பம் அவர்கள் "பெண்களாகிய நாம்" என்னும் தலைப்பில் நிறைவுரையாற்றினார். மகளிர் துணை குழு உறுப்பினர் தோழர் ஹெலன் நன்றியுரை ஆற்றினார். 100க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் ஆண் தோழர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

### திருப்பூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திருப்பூர் மாவட்டத்தில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளத்தின் அறைகூவல் படி கோரிக்கை பதாகைகளை ஏந்தி கைகோர்த்து மாவட்ட தலைவர் தோழர் ராணி தலைமையில் பெண் தோழர்கள் வரிசையில் நின்றனர் இந்த நிகழ்வை மாவட்ட செயலாளர் தோழர் எம். பாலசுப்பிரமணியன் ஒருங்கிணைத்து வாழ்த்துரை வழங்கினார் மாநில துணைத்தலைவர் பி.பரமேஸ்வரி இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

### கரூர்

கரூர் மாவட்ட தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர்.இரா. முத்துமாரி தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் தோழர்.எஸ். தமிழ் மணி வரவேற்புரையாற்றினார். "மகளிர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள்" என்ற தலைப்பில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் டாக்டர் சா.நளினி அவர்களும், "அரசு பணியில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்" என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவரும் மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளருமான தோழர் மு. செல்வராணி அவர்களும் கருத்துரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் 31 3 2025-ல் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற உள்ள கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துணை முதல்வர் டாக்டர் சா. நளினி அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் டாக்டர் எம் எஸ் அன்பழகன் மாவட்ட செயலாளர் தோழர் பொன் ஜெயராம் மாவட்ட துணை தலைவர் தோழர்.சி. கண்ணன் உள்ளிட்ட பல்வேறு துறை வாரிச் சங்க தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக சங்கத்தின் மாவட்ட இணை செயலாளர் தோழர்.கே. இளங்கோ நன்றி உரையாற்றினார்.

### திருச்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அனைத்துலக மகளிர் நாள் திறந்த வெளி கருத்தரங்கம் திருச்சி மாவட்ட உழைக்கும் பெண்கள் அடங்கிய அனைத்து தொழிற் சங்கங்களின் சார்பில் இந்திய தொலைதொடர்பு நிறுவன அலுவலகம் முன்பு மாவட்ட தரைக்கடை வியாபாரிகள் சங்க தலைவர் தோழர் செல்வி தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மகளிர் துணைக் குழு அமைப்பாளர் தோழர் அமுதவல்லி, ஆசிரியர் அமைப்பின் சார்பில் தோழர் ஹேமலதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் அமுதவல்லி சிறப்புரை ஆற்றினார். அரசு ஊழியர் சங்கம் மாவட்ட தலைவர் முனைவர் பால்பாண்டி மகளிர் நாள் குறித்த வரலாறு, பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள், பல்வேறு துறைகளில் பெண்கள்

சந்திக்கும் துன்ப துயரங்கள், விசாக குழு குறித்து பேசினார். சிஐடி மாநில துணைத் தலைவர் தோழர் ரங்கராஜன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் நவநீதன், தமிழ்நாடு சத்துணவு சங்கத்தின் மாவட்ட தலைவர் அல்போன்ஸ், மாவட்ட செயலாளர் அமுதா, எம்ஆர்பி செவிலியர் சங்கத்தின் சார்பில் தோழர் கோமதி, ஜெயசித்ரா, தொலைதொடர்பு துறை ஊழியர் சங்கத்தின் தோழர் செல்வராஜ்,டி ஆர் யூ சங்கத்தின் சார்பில் கோட்டச் செயலாளர் தோழர் கரிகாலன், போக்குவரத்து துறை சங்க நிர்வாகிகள், மின்வாரிய ஊழியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியாக தமிழ்நாடு அரசு சங்கத்தின் வட்டக்கிளை பொருளாளர் தோழர் பாரதி நன்றி கூறினார். கருத்தரங்கில் திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து உழைக்கும் சங்கங்களின் நிர்வாகிகள் உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் துணைத் தலைவர் தோழர் பெரியசாமி, மாவட்ட நிர்வாகிகள் தோழர் ஜீவானந்தம், வட்டக்கிளை நிர்வாகிகள் தோழர் சுரேஷ் பிரபு, சாந்தி, பெர்னத்மேரி, சசிகலா, பொன்னி தா.பேட்டை, அந்தநல்லூர், உப்பிலியாபுரம் சத்துணவு ஊழியர் உள்ளிட்ட அனைத்து துறை ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள். ●

## மேனாள் மாநில செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்களுக்கு

# பணி நிறைவு பாராட்டு விழா



மேனாள் மாநில செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா மாவட்டத் தலைவர் தோழர். ஆ.செந்தில்குமார் தலைமையில் பணி நிறைவு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட துணைத்தலைவர்கள் தோழர்கள் ஏ.ஆர். கவிதா, ஆ.தமிழ்வாணன், பா.பார்த்தசாரதி, என். தேசிங்குராஜன், மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர்கள் டி.ஜெயக்குமார், மு.ஹேமலதா, பொ.வெங்கடேசன், ஜி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்டச் செயலாளர் தோழர் இரமேஷ் இரா வரவேற்புரை ஆற்றினார். மேனாள் மாநில செயலாளர் தோழர்.ஆர். பன்னீர்செல்வம், மேனாள் மாவட்டத் தலைவர் தோழர் சை.கோவிந்தராசு, தோழர் சிவ. இரவிச்சந்திரன், தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தோழர் இரா.கலியமூர்த்தி, ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் ப.இளையராஜா, அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் தஞ்சாவூர் கோட்டச் செயலாளர் தோழர் எஸ். செல்வராஜ், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தோழர் ஏ.ஆர்.கவிதா, அனைத்து ஓய்வூதியர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளர் தோழர் இரா.தமிழ்மணி, திருச்சிராப்பள்ளி மாவட்டச் செயலாளர் தோழர் எஸ்.நவநீதன், மேனாள் மாநில செயலாளர் தோழர் எம்.சௌந்தரராஜன், திருவாரூர் மாவட்டம் அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ்.புஷ்பநாதன், மேனாள் மாநில செயலாளர் தோழர் உ.சண்முகம், மேனாள் மாநில துணைத் தலைவர் தோழர் ஆ.பெரியசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் வெ.சோமசுந்தரம், மாநில துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆ.ரெங்கசாமி, மாநிலப் பொருளாளர் தோழர் சா.டேனியல் ஜெய்சிங், மாநில செயலாளர் தோழர் செ.பிரகாஷ், மேனாள் மாநில தலைவர் தோழர் மு.அன்பரசு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாநில பொதுச்செயலாளர் தோழர் மு.சீனிவாசன் அவர்கள் நினைவு பரிசு வழங்கி நிறைவுரையாற்றினார். அனைத்து துறைவாரி தோழமை சங்க நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள் உள்ளிட்ட தோழமை சங்க தோழர்களும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.மேனாள் மாநில செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி அவர்கள் பாராட்டு விழா ஏற்புரை ஆற்றினார். மாவட்டப் பொருளாளர் தோழர் கோ.இராதாகிருஷ்ணன் நன்றி கூற பணி நிறைவு. பாராட்டு விழா சிறப்புற நிறைவுற்றது. ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441288 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.பாஸ்கரன்**

பொதுச் செயலாளர்
**மு.சீனிவாசன்**

மாநிலப் பொருளாளர்
**சா.டானியல் ஜெயசிங்**

மாநில துணைத் தலைவர்கள்
**சி.பரமேஸ்வரி**
**தெ.வாசுகி**
**மு.செல்வராணி**
**ஆ.அம்சராஜ்**
**தே.முருகன்**
**ச.தினேஷ்**

துணை பொதுச் செயலாளர்கள்
**வெ.சோமசுந்தரம்**
**அன்னா.குபேரன்**
**கே.மகாலிங்கம்**
**ஆ.ரெங்கசாமி**

மாநிலச் செயலாளர்கள்
**வே.விஜயகுமரன்**
**சு.வளர்மாலா**
**க.நீதிராஜா**
**செ.பிரகாஷ்**
**ஆ.ஜெசி**
**இ.மைக்கேல் லில்லி புஷ்பம்**


ஊடகச்செய்தி

நாள்: 29.03.2025

## கண்டன அறிக்கை

**கோரிக்கை மனுவை கசக்கி வீசி உதாசீனம் செய்து, மாநிலத்தலைவரை கைது செய்ய உத்தரவிட்ட பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.**

பெரம்பலூர் மாவட்டம் ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் சம்பந்தமாக அத்துறைச்சங்கத்தின் சார்பாக தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலத்தலைவர் தோழர்.சீ.காந்திமதிநாதன் மற்றும் பொதுச்செயலாளர் தோழர்.க.பிரபு மற்றும் மாநில நிர்வாகிகளுடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் தோழர்.மு.பாஸ்கரன் ஆகியோர் நேற்றைய தினம் பெரம்பலூர் மாவட்ட திட்ட அலுவலர் மற்றும் ஆட்சித்தலைவர் திருமதி.கிரேஸ் லால்ரின்டிகி பச்சாவ் இ.ஆ.ப. அவர்களை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்து ஊழியர்களின் பிரச்சனை குறித்த பேசிட சென்றனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் திருமதி.கிரேஸ் லால்ரின்டிகி பச்சாவ் இ.ஆ.ப. அவர்களை சந்திக்க நீண்ட நேரம் காத்திருந்தும் மாநில நிர்வாகிகளை சந்திக்க மாவட்ட ஆட்சியர் அனுமதிக்கவில்லை. ஆயினும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழைப்பார் என்ற நம்பிக்கையுடன் நிர்வாகிகள் காத்திருந்தனர். நீண்ட நேரத்திற்குப்பிறகு உள்ளே சென்ற அமைதியாக மாநில நிர்வாகிகளை மிகுந்த கோபாவேசத்தோடு கடுமையாக பேசிய மாவட்ட ஆட்சியர் அவர்கள், நிர்வாகிகள் கொடுத்த கோரிக்கை மனுவை கசக்கி வீசி I Don't Want of Wast of My Time, Get out... Get out.... Get out கோபமாக பேசியதோடு, கோரிக்கைகள் குறித்து பேசிக்கொண்டிருந்த நிர்வாகிகளை கைது செய்ய காவல்துறை கண்காணிப்பாளரை அழைத்தார். மாவட்ட ஆட்சியர் அறைக்குள் நுழைந்த காவல்துறையினர் மாநில நிர்வாகிகளின் கைகளைப்பிடித்து இழுத்து கைது செய்தனர். அமைதியாக சென்று காவல்துறை வாகனத்தின் ஏறிய மாநில நிர்வாகிகளை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். அங்கு காவல்துறை வாகனத்திலிருந்து மாநில நிர்வாகிகளை கீழே இறங்க விடாமல், மாநில நிர்வாகிகளின் கைபேசிகளை பறிமுதல் செய்தனர். பலமணிநேரம் குடிநீர் கூட கொடுக்காமல் அரசு ஊழியர்களை, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அரசு ஊழியர் சங்க

மாநிலத்தலைவர் தோழர்.பாஸ்கரன் அவர்களை காவல்துறை வாகனத்திற்குள்ளேயே அடைத்துவைத்து அராஜகம் செய்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்தவுடன் காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகளைத் தொடர்புகொண்டு பேசி இது ஜனநாயக விரோதமானது. அமைதியான முறையில் ஊழியர்கள் பிரச்சனைகள் குறித்து பேசச்சென்ற மாநில நிர்வாகிகளை கோபமாக பேசியதோடு, கோரிக்கை மனுவை கிழித்து வீசியதோடு, காவல்துறையினரைக்கொண்டு சமூக வீரோதிகளைப்போல கைது செய்து காவல்துறை வாகனத்தில் ஏற்றிச்சென்று, அவ்வாகனத்திலேயே பல மணிநேரம் அடைத்துவைத்துள்ளனர். இதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த ஜனநாயக விரோதச்செயலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்காது. எனவே, இதுகுறித்து ஸ்தாபன ரீதியான இயக்க நடவடிக்கைகள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து காவத்துறை வாகனத்திலிருந்து மாநில நிர்வாகிகளை கீழே இறங்க அனுமதித்து அசுவாசப்படுத்தினர். அதன்பிறகு காவல்துறை வாகனத்திலேயே அழைத்துச்சென்று கைது செய்த இடமான மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகத்திலேயே இறக்கிவிடப்பட்டனர்.

மேற்கண்ட நிகழ்வுகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. இதுபோன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளை செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும். தமிழ்நாடு ஊரகவளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத்தலைவரை அழைத்துப்பேசி கோரிக்கைகள் குறித்து பேசித்தீர்க்க வேண்டும். மேற்கண்ட ஜனநாயக விரோத நடவடிக்கைக்காக மாவட்ட ஆட்சியர் அவர்கள் மீது துறை தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும். என வலியுறுத்தி வருகிற 02.04.2025 (புதன் கிழமை) அன்று அனைத்து வட்டத்தலைநகரங்களிலும் மாலை நேர கண்டன ஆர்பாட்டம் நடத்தப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பொதுச்செயலாளர்.

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M.Baskaran Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# 23.3.2025 அன்று ஜாக்டோ - ஜியோ
# மாவட்ட தலைநகர் உண்ணாவிரதம்


காஞ்சிபுரம்


கன்னியாகுமரி


கள்ளக்குறிச்சி


திண்டுக்கல்


பெரம்பலூர்


தேனி


நாகப்பட்டினம்


திருவாரூர்


மயிலாடுதுறை


திருவள்ளூர்


தஞ்சாவூர்


புதுக்கோட்டை

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 11.04.2025

## மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் - சிறப்பு கருத்தரங்கம் மற்றும் மனித சங்கிலி


திண்டுக்கல்



கன்னியாகுமரி



கரூர்


தருமபுரி


தூத்துக்குடி



கிருஷ்ணகிரி


வடசென்னை - தென்சென்னை



திருவாரூர்


திருவள்ளூர்



தஞ்சாவூர்



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com | Editor: M.Baskaran